வடமராட்சிக்கான
உதயன்
கிளைக் காரியாலயம் தற்போது
மாலுசந்தி அல்வாயில்
கிளைப் பணிமனையில் செய்திகள் மற்றும் விளம்பரங்களை காலை 08.30 முதல் இரவு 10.00 மணிவரை கையளிக்கலாம்.
T.P: 021 4927 454, 077 120 9996



Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 87

செவ்வாய்க்கிழமை 21 பெப்ரவரி 2023 | மாசி 09 ஆம் நாள் - வள்ளுவர் ஆண்டு 2054 | பக்கங்கள் 12






# '13'ஐ இல்லாதொழிக்கும் அரசமைப்புக்கே ஆதரவு

## விமல், கம்மன்பில, வீரசேகர கூட்டாகத் தெரிவிப்பு

கொழும்பு, பெப்ரவரி 21

இலங்கைக்கு சாபக்கேடான '13'ஆவது திருத்தச் சட்டத்தை 22ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக இல்லாதொழிக்கவேண்டும். அதற்கான நடவடிக்கைக்கு நாம் முழுமையான ஆதரவை வழங்குவோம் - இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ஸ, சரத் வீரசேகர, உதய கம்மன்பில ஆகியோர் கூட்டாகத் தெரிவித்துள்ளனர். »11

## அண்ணாமலையின் கருத்துக்கு கஜேந்திரகுமார் கண்டனம்!

யாழ்ப்பாணம், பெப். 21

அண்ணாமலை ஈழத்துக்கு வந்து சென்னை திரும்பிய பின்னர், ஈழத் தமிழர்களுடைய பிரச்சினைக்கு '13'ஆவது திருத்தம் தான் தீர்வு என்றும், இங்குள்ள மக்கள் அதைத் தான் வலியுறுத்தியுள்ளார்கள் எனவும் கருத்துக்களை வெளியிட்டிருந்தார். அவருடைய இந்தக் கருத்தை நாங்கள் நிராகரிப்பது »04

## ஒரேநாளில் இருதடவைகள் மோதுண்டது யாழ்ராணி!

### தெய்வாதீனமாக உயிரிழப்பேதுமில்லை

கிளிநொச்சி, பெப். 21

கிளிநொச்சி - அறிவியல்நகர் பகுதியில் இ.போ.ச. பேருந்து, கப் ரக வாகனம் என்பவற்றை மோதித் தள்ளிய யாழ்ராணி ரயில், பின்னர் சிறிது »11

எவ்வேளையிலும்

## நாடாளுமன்றத்தை ரணில் கலைக்கலாம்!

கொழும்பு, பெப். 21

எந்தநேரத்திலும் நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு நேற்று நள்ளிரவிலிருந்து கிடைக்கப்பெற்றுள்ளது. »11

## குண்டுகளுக்கு அஞ்சோம் தேர்தல்வரை துஞ்சோம்!

சஜித் முழக்கம்

விரிவு:- பக்.11

## சுதந்திரநாள் பேரணி பொலிஸார் பாகுபாடு!

### நீதிமன்றில் சுட்டிக்காட்டினார் ஜனாதிபதி சட்டத்தரணி தவராஜா

யாழ்ப்பாணம், பெப். 21

தென்னிலங்கையில் போராட்டங்களில் ஈடுபடும் பிக்குகள்மீது பொலிஸார் நடவடிக்கையெடுப்பதில்லை. மாறாக, வடக்கில் அமைதிவழிப் போராட்டத்தில் ஈடுபடும் இந்து மதகுரு வேலன் சுவாமிகள் மீது அனைத்து வழக்குகளும் பதிவு செய்யப்படுவதாக ஜனாதிபதி »11

## தேர்தலை மார்ச் 9 இல் எம்மால் நடத்தமுடியாது

### நீதிமன்றுக்கு அறிவித்தது ஆணைக்குழு

கொழும்பு, பெப். 21

திட்டமிட்டபடி உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தமுடியாது என தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது. நிதி உள்ளிட்ட போதிய வசதி கிடைக்கப் பெறாமையால் முன்னதாக உறுதியளித்தபடி தேர்தலை நடத்தமுடியாதென தேர்தல் ஆணைக்குழு உயர்நீதிமன்றுக்கு »11

அவசரஅவசரமாக

## பருத்தித்தீவிலிருந்த பொருள்கள் எழுவைதீவுக்கு நேற்று மாற்றம்

யாழ்ப்பாணம், பெப். 21

பருத்தித்தீவில் சீனர்களின் நடமாட்டம் தொடர்பான செய்தி நேற்று வெளியானதையடுத்து அங்கிருந்த பொருள்கள் அவசர அவசரமாக நேற்றுக் காலை எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. எழுவைதீவின் ஒதுக்குப்புறமாக அவை இறக்கப் »04

## 15 வயதுச் சிறுமிகள் இருவர் வன்புணர்வு

யாழ்ப்பாணம், பெப். 21

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட 15 வயது சிறுமிகள் இருவர் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். »04

## வேலைக்குச்சென்ற இடத்தில் நகைகளைத் திருடியவர் கைது

யாழ்ப்பாணம், பெப். 21

தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மல்லாகம் - கல்லாரையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை தச்சு வேலைக்குச் சென்று »04

## திருட்டைத்தடுக்கும் தமிழர்களை மோசமாகத் தாக்கும் சிங்களவர்கள்

### தமிழர் தாயகத்தில் அவலம்

முல்லைத்தீவு, பெப். 21

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய், சிவந்தாமுறிப்பு பகுதியில், தமிழ் கால்நடை வளர்ப்பாளர் ஒருவர் பெரும்பான்மை இனத்தவர்கள் சில ரால் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார். »04

## கட்டப்பிராயில் 16 பவுண் களவு

யாழ்ப்பாணம், பெப். 21

கட்டப்பிராயில் வசித்துவரும் ஓய்வுபெற்ற ஆசிரியரின் வீடு உடைத்து 16 பவுண் நகைகள் வாடப்பட்டுள்ளதாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப் »11


வெளிநாட்டிலிருந்து பணம் அனுப்புவோருக்கும் மற்றும் இலங்கையில் பணம் பெறுபவருக்கும் பரிசுகள் பல...
செலான்
எதுர காசி யெதுர வாசி
Season 2
ஒரு கோடிக்கு மேற்பட்ட பரிசுகள்
மாபெரும் சீட்டிழுப்பில் பத்து இலட்சம்
Western Union கொடுக்கல் வாங்கல்களுக்கு நிச்சய பரிசு
இலட்சாதிபதிகள் 38 பேர்
* நிபந்தனைகளுக்கு உட்பட்டது.
011 200 88 88 www.seylan.lk
செலான் வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜபக்சக்களின் ஊழலாலேயே சிதைவடைந்தது இலங்கை

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா ஆவேசம்

கொழும்பு, பெப். 21



எந்தவித வரையறையும் இல்லாமல் ராஜபக்ச குடும்பம் அரசாங்கத்தின் நிதியைக் கொள்ளையடித்து ஊழல் மோசடியில் ஈடுபட்டது. இதனால் தற்போது பொருளாதாரப் பாதிப்பு என குறிப்பிட்டுக் கொண்டு அரச தலைவர்கள் சர்வதேசத்திடம் யாசகம் பெறுகின்றனர் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

மதுகம நகரில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நவ லங்கா சுதந்திரகட்சியின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துரைக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் இன்றைய அவல நிலையைக்கண்டு மன வேதனையடைகிறேன். முழு உலகத்துக்கும் சிறந்த எடுத்துக்காட்டாக இருந்த இலங்கை, இன்று ராஜபக்ச குடும்பத்தின் ஊழல் மோசடியால் வங்குரோத்து நிலை அடைந்துள்ளது. பொருளாதார பாதிப்பு எனக் குறிப்பிட்டுக் கொண்டு அரச தலைவர்கள் தற்போது சர்வதேசத்திடம் யாசகம் பெறுகிறார்கள்.

எனது 11 வருட ஆட்சிக்காலத்தில் யுத்தத்துடன் போராடினேன். ஒரு முனையில் யுத்தத்தைப் புரிந்து கொண்டு மறுபுறம் நாட்டை அபிவிருத்தி செய்தேன். பதவிக்காலம் முடிந்த பிறகு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவிடம் ஆட்சியை ஒப்படைக்கும்போது நாட்டில் ரூபாவும் இருந்தது, டொலரும் இருந்தது.

மக்களைத் தவறாக வழிநடத்தி ஆட்சியைக் கைப்பற்றிய ராஜபக்ச குடும்பம், முழு நாட்டையும் சூறையாடியது. வரையறையற்ற கடன்களாலும், அனைத்து அபிவிருத்திகளிலும் மேற்கொள்ளப்பட்ட மோசடியாலும் நாடு பெரும் கடன் சுமையை எதிர்கொண்டது. ராஜபக்ச குடும்பமும், அவர்களைச் சார்ந்தோரும் எந்தவித வரையறையும் இல்லாமல் அரச நிதியைக் கொள்ளையடித்தனர். ஊழல் மோசடி தொடர்பில் மஹிந்த ராஜபக்ச அவதானம் செலுத்தவில்லை. அகப்படாத வகையில் ஊழல் மோசடிகளைச் செய்யுங்கள் என அவர் அவரது சகாக்களுக்கு ஆலோசனை வழங்கினார். இறுதியில் பொருளாதார பாதிப்பு முழு நாட்டையும் வங்குரோத்து நிலைக்குக் கொண்டு சென்றுள்ளது.

மீண்டும் ராஜபக்சக்கள் தலைமையிலான ஆட்சியை உருவாக்குவதாகக் குறிப்பிட்டுக் கொண்டு ஒரு தரப்பினர் அரசியல் செய்கின்றனர். நாட்டின் எதிர்கால தலைமுறையினரின் நலனைக் கருத்தில் கொண்டு மிகுதியாக இருக்கும் வளங்களைப் பாதுகாக்கவேண்டுமாயின் ராஜபக்சக்கள் கௌரவமாக அரசியலில் இருந்து விலக வேண்டும். அதுவே நாட்டுக்கு அவர்கள் செய்யும் அளப்பரிய சேவை - என்றார். (ம-14,இ)

# தேர்தலைப் பிற்போடுவதற்கு தோல்விப் பயமே காரணம்!

## ஜி.எல். பீரிஸ் சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 21



அரசாங்கத்துக்கு வாக்கு இல்லை என்பதே தேர்தலைப் பிற்போடும் செயற்பாடுகளுக்கான உண்மைக் காரணியாக உள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

வெலிகம பகுதியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற சுதந்திரமக்கள் கூட்டணியின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உள்ளூராட்சித் தேர்தலுக்கு நிதி இல்லை என்று அரசாங்கம் குறிப்பிடுவது முற்றிலும் பொய்யானது. அரசாங்கத்துக்கு வாக்கு இல்லை என்பதே தேர்தலைப் பிற்போடும் செயற்பாடுகளுக்கான உண்மைக் காரணியாக உள்ளது.

உள்ளூராட்சித் தேர்தலைப் பிற்போட அரசாங்கம் 21 தடவைகள் மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்த நிலையில் 22 ஆவது முயற்சி தற்போது பகுதியளவில் வெற்றி பெற்றுள்ளது. வாக்கெடுப்புக்குத் தேவையான வாக்குச்சீட்டுக்களை அச்சிட நிதி வழங்காத காரணத்தால் அரச அச்சகத் திணைக்களம் வாக்குச்சீட்டு அச்சிடல் பணிகளை இடைநிறுத்தியுள்ளது. இலங்கை அரசியல் வரலாற்றில் இவ்வாறான சம்பவம் இடம்பெறவில்லை. பல்வேறு நெருக்கடிகளை ஏற்படுத்தி உள்ளூராட்சி மன்றத் தேர்தலைப் பிற்போடும் முயற்சியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆரம்பத்தில் இருந்து முன்னெடுக்கிறார்.

உள்ளூராட்சித் தேர்தலைப் பிற்போட்டு எதிர்வரும் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலை நடத்தி மக்களாணையைப் பெற்றுக்கொள்ள ரணில் அவதானம் செலுத்தியுள்ளார்.

2020ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கிடைத்த பெறுபேற்றில் எவ்வித மாற்றமும் இனி ஏற்படாது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடமிருந்து நாட்டு மக்கள் அடிப்படை உரிமைகளையும் ஜனநாயகத்தையும் பாதுகாப்பது பெரும் சவாலாக உள்ளது. தேர்தலில் வெற்றிபெறுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதைக் காட்டிலும், தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கத்துக்கு அழுத்தம் பிரயோகிக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றோம். மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்க சட்டத்தின் ஊடாக உரிய நடவடிக்கைகளை முன்னெடுப்போம் - என்றார். (ம-14,இ)

# தேர்தல் வெற்றியின் பின் வெளிப்படையான ஆட்சி!

## சஜித் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 21

எதிர்வரும் தேர்தலில் வெற்றியீட்டிய பின்னர் நாட்டில் வெளிப்படையான ஆட்சி மேற்கொள்ளப்படும் என்று எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டை இவ்வளவு பாதாளத்துக்குக் கொண்டு சென்றது ராஜபக்ச குடும்பவாதமே. இதற்காக 2005 ஆம் ஆண்டில் ராஜபக்சக்களை ஆதரித்து வீடு வீடாகச் சென்று தேர்தல் பிரசாரத்தை மேற்கொண்டது. நாட்டுக்கு தீர்வு என கூறிக் கொண்டிருக்கும் சிவப்புத் தம்பிமார்கள்தான். நாட்டை அழித்த ராஜபக்சர்களுக்கு அவர்கள் மகுடம் சூட்டினாலும் அவர்களை ஆட்சிக்குக் கொண்டுவர நான் பாடுபடவில்லை. நான் எப்போதும் பொதுமக்களுடனேயே இருக்கின்றேன். எதிர்வரும் தேர்தல் வெற்றியின் மூலம் எமது நாட்டிலிருந்து கொள்ளையடிக்கப்பட்ட சொத்துக்கள், செல்வங்கள், பணம் அனைத்தும் மீண்டும் நாட்டுக்குக் கொண்டுவரப்பட்டு திருடர்களைப் பிடித்து வெளிப்படைத்தன்மை வாய்ந்த அரச ஆட்சி நடைமுறைப்படுத்தப்படும்.

போராட்டத்தின் மூலம் ராஜபக்சக்கள் விரட்டியடிக்கப்பட்டாலும், தற்போதைய ராஜபக்ச நிழல் அரசாங்கம் மக்களின் ஜனநாயக உரிமையான வாக்குரிமையைக்கூட பல்வேறு சதிகளால் தடுத்துள்ளது. அவர்கள் மகிழ்ச்சியாக இருக்கப்போதுமான பணம் உள்ளபோதிலும், தேர்தல் செலவுக்கு மட்டும் பணம் இல்லை எனக் கூறுவது நகைப்புக்குரியது - என்றார். (ம-14)

# மின்னுற்பத்திச் செலவு இலங்கையில் அதிகம்

கொழும்பு, பெப். 21

இலங்கையில் மின்சார அலகு ஒன்றின் உற்பத்திச் செலவு, ஓர் அலகுக்காக இந்தியா செலவிடும் தொகையை விட இரண்டு மடங்கு அதிகம் என இந்திய மின்சக்தி அமைச்சின் அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த அறிக்கையின்படி, ஓர் அலகு மின்சாரத்தை உற்பத்தி செய்ய இந்தியா 25 ரூபாவை (இலங்கை ரூபா) மட்டுமே செலவிடுகிறது. எனினும் இலங்கை தற்போது ஓர் அலகு மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு 52 ரூபாவைச் செலவிடுகிறது - என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம)

# ரணிலின் கொள்கைகளே சஜித் தரப்பிடமும் உள்ளன

## நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவிப்பு

கொழும்பு, பெப். 21

ரணிலுடன் இல்லாவிட்டாலும் ரணிலின் கொள்கைகளையே சஜித் தரப்பு நடைமுறைப்படுத்துகின்றது என்று மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் மருத்துவர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்;

சஜித் அரசாங்கத்திடம் தேர்தலை நடத்துமாறு தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்ற போதிலும் தேர்தலில் அடையவுள்ள தோல்வி தொடர்பில் அச்சமடைந்துள்ளார். அதை அவர் காட்டிக்கொள்ளவில்லை. தோல்வியை ஏற்றுக்கொள்ள முடியாமல் தேசிய மக்கள் சக்தி மீது கடும் அதிருப்தி கொண்டுள்ளார். இன்று ரணில் தலைமையிலான பெரமுன அரசாங்கம் தோல்வியடைந்துள்ளது. ராஜபக்சக்களைச் சார்ந்திருந்தவர்கள் இப்போது தனித் தனியாக பிரிந்து சென்றிருந்தாலும், மக்கள் அவர்களை முற்றாக நிராகரித்துள்ளனர்.

சஜித் என்பவர் கூட அரசியலுக்குப் புதியவரல்லர். வங்குரோத்து அடைந்த அரசாங்கத்தின் பங்காளி. 2015 முதல் 2019 ஆம் ஆண்டு வரை நல்லாட்சி அரசாங்கத்தின் முக்கியமான அமைச்சுப் பதவியை வகித்த ஒருவர். அவரின் கீழிருந்த எந்தவொரு திணைக்களமும் இலாபத்தை ஈட்டவில்லை. சஜித் பிரேமதாஸ வீடமைப்பு அமைச்சராகப் பதவியேற்பதற்கு முன்னர் விமல் வீரவன்ஸ வீடமைப்பு அமைச்சராக செயற்பட்டவர். அப்போது இடம்பெற்ற ஊழல் மோசடிகள் தொடர்பில் எந்தவொரு நடவடிக்கைகளையும் சஜித் எடுக்கவில்லை. திருடர் மூலம் திருடர் பாதுகாக்கப்பட்டார். பொருளாதாரத்தை கட்டியெழுப்பவில்லை. இந்தக் கும்பலின் சாயல் எப்படிப்பட்டது என்பது நாட்டு மக்களுக்கு நன்றாகத் தெரியும் - என்றார். (ம-14,இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பெரமுனவைப் பின்பற்றினால் கோத்தாபயவின் நிலை வரும்

### குமார வெல்கம சாட்டை

கொழும்பு, பெப். 21

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் ஆணை இல்லாத காரணத்தால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளூராட்சிமன்றத் தேர்தலை பிற்போட முயற்சிக்கிறார். பொருளாதாரப் பாதிப்பு எனக் குறிப்பிட்டுக் கொண்டு ஜனநாயகத்துக்கு எதிராக செயற்பட்டால் கோத்தாபய ராஜபக்சவுக்கு ஏற்பட்ட கதியே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஏற்படும் இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

மதுகம நகரில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நவலங்கா சுதந்திரக் கட்சியின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

225 நாடாளுமன்ற உறுப்பினர்களும் திருடர்கள் என்று மக்கள் விமர்சிக்கும் நாட்டில் வாழ்கிறோம். தவறுகளைத் திருத்திக்கொண்டு இளம் தலைமுறையினருக்கு முன்னுரிமை வழங்கி சிறந்த மாற்றத்தை நோக்கிப் பயணிக்கவேண்டும். உள்ளூராட்சிமன்றத் தேர்தலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடத்தமாட்டார் என்று ஆரம்பத்தில் குறிப்பிட்டேன். சிறிலங்கா பொதுஜன பெரமுனவால் மக்கள் மத்தியில் செல்ல முடியாது. இதனால் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் பிற்போடப்படும்.

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தாபய ராஜபக்ச அரசியலுக்குப் பலவீனமானவர் என்று குறிப்பிட்டேன். அப்போது என்னைக் கடுமையாகச் சாடினார்கள். இறுதியில் இரண்டரை வருடத்துக்குள் நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து பலவீனமான அரச தலைவரான கோத்தாபயவை விரட்டியடித்தனர்.

இவ்வாறு சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தவறான ஆலோசனைகளுக்கு அமைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனநாயகத்துக்கு எதிராக செயற்பட்டால் கோத்தாபய ராஜபக்சவுக்கு ஏற்பட்ட கதியே ரணிலுக்கும் ஏற்படும். பொருளாதார பாதிப்பு உள்ளது என்பதை ஏற்றுக்கொள்கிறோம்.

ஆனால், பொருளாதாரப் பாதிப்பு எனக் குறிப்பிட்டுக் கொண்டு ஜனநாயகத்துக்கு முரணான செயற்பாடுகளை முன்னெடுக்க இடமளிக்க முடியாது - என்றார். (ம-14-இ)

# தேர்தல்கள் ஆணைக்குழு விரைவில் கலைக்கப்படும்?

## புதிய ஆணைக்குழுவின் கீழேயே அடுத்த தேர்தல் நடவடிக்கைகள்

கொழும்பு, பெப். 21

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தற்போதைய தலைவர் உட்பட சகல உறுப்பினர்களும் நீக்கப்பட்டு புதிய உறுப்பினர்களுடன் தேர்தல்கள் ஆணைக்குழு அமைக்கப்படவுள்ளது என்று கொழும்பு ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

அரசமைப்புப் பேரவை அனைத்து ஆணைக்குழுக்களுக்கும் தற்போது விண்ணப்பங்களைக் கோரியுள்ளது. இதனால், தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் உள்ளிட்ட உறுப்பினர்கள் அனைவரும் ஒரே நேரத்தில் நீக்கப்படுவார்கள் எனத் தெரியவருகின்றது. இதன்படி, எதிர்காலத்தில் இடம்பெறவுள்ள தேர்தல்கள் புதிய தலைவர் மற்றும் உறுப்பினர்களைக் கொண்ட தேர்தல்கள் ஆணைக்குழுவாலேயே முன்னெடுக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைக்கும் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் தற்போது பகுதியளவில் வெற்றி பெற்றுள்ளன. அவ்வாறு தேர்தலை ஒத்திவைப்பது முற்றுமுழுதாக உறுதியானதும் இந்த நீக்கம் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ம-14)

## தபால் திணைக்களத்தில் 2,000 வெற்றிடங்கள்

கொழும்பு, பெப். 21

இலங்கைத் தபால் திணைக்களத்தில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வெற்றிடங்கள் காணப்படுகின்றன என்று பிரதித் தபால்மா அதிபர் ராஜித ரணசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரச சேவையில் புதிதாக நபர்களை இணைத்துக் கொள்வது நிறுத்தப்பட்டுள்ள நிலையில் இலங்கைத் தபால் திணைக்களத்தில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

இன்று (நேற்றுத் திங்கட்கிழமை) 218 பேருக்கு பதவி உயர்வு வழங்கி அவர்களுக்கான பயிற்சி நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

உள்ளக ரீதியில் நடத்தப்பட்ட பரீட்சைப் பெறுபேறுகளுக்கு அமைவாக இவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் - என்றார். (ம-14-இ)

## உள்ளூராட்சித் தேர்தலை நிறுத்துமாறு உத்தரவிடுக!

### ரிட் மனு மீது 23ஆம் திகதி விசாரணை

கொழும்பு, பெப்.21

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான ஏற்பாடுகளை செல்லுபடியற்றதாக்குமாறு உத்தரவிடக்கோரி ஓய்வு பெற்ற இராணுவ கேணல் டபிள்யூ.எம்.ஆர். விஜேசுந்தரவால் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனு, எதிர்வரும் 23ஆம் திகதி பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த மனு நேற்றுத் திங்கட்கிழமை நீதியரசர்களான எஸ்.துரைராஜா மற்றும் ஷிரான் குணரத்ன முன்னிலையில் அழைக்கப்பட்டது. இதன்போதே எதிர்வரும் 23ஆம் திகதி குறித்த மனுவை பரிசீலிக்க நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

டபிள்யூ.எம்.ஆர்.விஜேசுந்தரவால் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனு நாளைமறுதினம் 23ஆம் திகதி விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்படும் என்பது ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட ஒன்றுதான்.

எனினும், தபால் மூலம் வாக்களிப்பு காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டதையடுத்து, 23ஆம் திகதிக்கு முன்னதாக மனுவைப் பரிசீனைக்கு எடுத்துக் கொள்ளுமாறுகோரி, மனுதாரர் தரப்பில் உயர்நீதிமன்றில் நகர்த்தல் பத்திரமொன்று தாக்கல் செய்யப்பட்டதையடுத்தே இந்த மனு நேற்று அழைக்கப்பட்டது. எனினும், 23ஆம் திகதியே மனுமீது விசாரணை நடத்துவது என்ற தீர்மானமே மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டது. (ம)

# மக்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுப்பாராம் ரணில்

### ஐ.தே.க பிரதித் தலைவர் தெரிவிப்பு



கொழும்பு, பெப். 21

டிசெம்பர் மாதத்துக்குள் எடுக்கப்பட்ட கடுமையான தீர்மானங்களை இலகுபடுத்தி மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பார் என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜேவர்த்தன தெரிவித்தார்.

கொழும்பு மாளிகாவத்தை பிரதேசத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதியும் நாங்களும் மக்களுக்கு ஏதாவது சேவை ஒன்றை மேற்கொள்ளவே முயற்சிக்கிறோம். அவ்வாறு இல்லாமல் அரசியல் செய்வதில் பயனில்லை. அதனால் நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதாரப் பிரச்சினைக்கு தீர்வுகாண சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெறவேண்டியுள்ளது.

நாட்டின் திறைசேரியில் பணம் இல்லை. தேர்தலை நடத்துவதற்குக்கூட எங்களிடம் பணம் இல்லை.

இவ்வாறான நிலையில் சர்வதேச நாணய நிதியத்தின் மூலம் பணம் பெற்றுக்கொள்வதாக இருந்தால் அவர்களின் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ள வேண்டி ஏற்படுகிறது. அவர்களின் நிபந்தனைகளுக்கமையவே வரி அதிகரிக்கவேண்டி ஏற்பட்டிருக்கிறது.

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து பணம் பெற்றுக்கொள்வதாக இருந்ததால், அவர்கள் தெரிவிக்கும் கடினமான தீர்மானங்களை நிறைவேற்ற வேண்டி ஏற்படுகிறது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மைக்காலத்தில் எடுத்த சில தீர்மானங்கள் மிகவும் கடுமையான தீர்மானங்களாகும். சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அமையவே அவ்வாறான தீர்மானங்களை எடுக்கவேண்டி ஏற்பட்டது. என்றாலும் தற்போது எடுக்கப்பட்டிருக்கும் கடுமையான தீர்மானங்களை டிசெம்பர் மாதத்துக்குள் இலகுபடுத்தி மக்களுக்கு நிவாரணம் வழங்க ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார். அப்போது ஜனாதிபதி எடுத்த தீர்மானத்தை மக்கள் ஏற்றுக்கொள்வார்கள் - என்றார். (ம-14-இ)

### ஐ.ம.சக்தியினர் பலருக்கு

## காலிமுகத்திடலுக்குள் நுழைவதற்குத் தடை!

கொழும்பு, பெப். 21

கொள்ளுப்பிட்டி மற்றும் ஜனாதிபதி செயலகம், நிதியமைச்சு மற்றும் காலிமுகத்திடல் உட்படப் பல பகுதிகளுக்குள் நுழைய ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் மற்றும் பலருக்குத் தடை விதித்து கோட்டை நீதிவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவின் தலைமையில் போராட்டமொன்று நேற்றையதினம் கொழும்பில் ஒழுங்கமைக்கப்பட்டது.

அடுத்தடுத்த நாள்களிலும் போராட்டங்கள் அங்கு முன்னெடுக்கப்படலாம் என்று கருதப்படுகின்றது.

இதையடுத்து பொலிஸார் நீதிமன்றத்தில் முன்வைத்த விண்ணப்பங்களுக்கு அமையவே இந்தத் தடை விதிக்கப்பட்டது. (ம-14-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு 22 . 08 . 1959



இறப்பு 20 . 02 . 2023

## இரத்தினம் இராஜசண்முகேந்திரசிங்கம்

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் இராஜசண்முகேந்திரசிங்கம் நேற்று (20.02.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் இரத்தினம் - கண்ணம்மா தம்பதிகளின் மகனும், ஜெகநாதன் - இராஜேஸ்வரி தம்பதிகளின் மருமகனும், கமலலோஜினி அவர்களின் பாசமிகு கணவரும், உமா (இராசாத்தி-கனடா), ராஜமகேந்திரசிங்கம், செட்டி (சந்திரா - கனடா), காலஞ்சென்ற ராஜசத்தியேந்திரசிங்கம் ஆகியோரின் சகோ-தரனும், சைலஜா (கனடா), கதீபன், அமிர்தன், சதீஸ் ஆகியோரின் தந்தையாரும், ஜெயராஜ் (கனடா), பிரேமிலா, தவரஞ்சினி, நிறோசா ஆகியோரின் மாமனாரும், நிலக்ஷிகா (கனடா), தேனுஜன்சனால், அனுசன், கரிகிஷோ, அக்சரா, கிருத்திகா ஆகியோரின் அன்புப் பேரனும் சிவகுமார், வாமதேவன், சொரூபா, றேணுகா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.02.2023) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

076 833 6150 (அமிர்)
074 150 6158 (சதீஸ்)

தகவல் : குடும்பத்தினர்

(CS 23592) (3/6)

## வேலைக்குச்சென்ற...

பத்து லட்சம் ரூபா பெறுமதியான நகையைத் திருடியவர் நேற்று திங்கட்கிழமை கிழமை மாலை தெல்லிப்பழை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளாரென தெல்லிப்பழை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

கல்லாரையில் வசிக்கும் மூதாட்டி ஒருவர் தனது வீட்டு வேலைக்காக அந்தப் பகுதியில் தச்சு வேலை செய்யும் மூவரை அழைத்துள்ளார். இவ்வாறான நிலையில், அவரது வீட்டிலிருந்த ஒரு சங்கிலி, ஒரு சோடி காப்பு உட்பட பத்து லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் திருடப்பட்டுள்ளதாகத் தெரிவித்து மூதாட்டி தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டை நேற்றுமுன்தினம் பதிவு செய்தார்.

துரிதமாக விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் தச்சுவேலை செய்த மூவரில், 37 வயதான ஒருவரை விசாரணைக்கு உட்படுத்தினார். இதையடுத்து நகைகள் திருடியதை ஒப்புக்கொண்டு அவற்றை பொலிஸாரிடம் அவர் கையளித்துள்ளார்.

சந்தேகநபரை மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸ் பொறுப்பதிகாரி குறிப்பிட்டார்.

(அ-ஒ-125)

## அண்ணாமலையின்...

மட்டுமல்லாது அதனை வன்மையாகக் கண்டிக்கிறோம் - என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் மக்கள் கடந்த 87ஆம் ஆண்டிலிருந்து, '13'ஆவது திருத்தம் ஒற்றையாட்சிக்குள் இருப்பதாகக் கூறி அதனை நிராகரித்து வந்துள்ளார்கள். '13'ஆவது திருத்தம்தான் தீர்வு எனக்கூறி இந்திய நாட்டின் பொம்மைகள், எடுபிடிகள் அல்லது கூலிகள் இங்கு அரசியலில் செயற்பட்டுக்கொண்டு இருந்தும்கூட அவர்கள் இங்கு தேர்தல் கேட்டு வாக்குப் பெற முடியாத சூழ்நிலைதான் உள்ளது.

இந்தியாவில் இருந்து வந்தவர்கள் இங்கு வந்து தமது முகவர்களைத்தான் சந்தித்தார்களே தவிர பொதுமக்களைச் சந்திக்கவில்லை. தாங்களே '13'ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறு கூறிவிட்டு வந்து, இங்கு இருக்கின்ற முகவர்கள் அதனைக் கதைக்கும்போது ஏதோ ஈழத்தமிழர்கள் அதனை ஏற்றுக் கொள்வதாகக் கூறுவது பொருத்தமற்ற கருத்து.

நாங்கள் பாதிக்கப்பட்ட, இன அழிப்புக்குள்ளான ஒரு இனம். போருக்குப் பின்னர் தொடர்ச்சியாக இன அழிப்புக்கு உட்பட்டுள்ள ஒரு இனம். இவை அனைத்துக்கும் காரணம் இந்த ஒற்றையாட்சிக்குள் உள்ள கட்டமைப்புகள்தான். '13'ஆவது திருத்தம் ஒரு துளியளவுகூட தமிழ் மக்களைப் பாதுகாக்கவில்லை. இந்நிலையில் அதனை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை - என்றார்.

(அ-ஒ-இ)

## 15 வயதுச்...

மகாசிவராத்திரி அன்று வீட்டில் உள்ளவர்கள் ஆலயத்துக்குச் சென்றிருந்த நிலையில், தனியாக நின்றிருந்த 15 வயதுச் சிறுமியை நபர் ஒருவர் வன்புணர்வுக்குள்ளாக்கியுள்ளார். வீட்டாரைக் கண்டதும் அவர் தப்பித்துச் சென்றுள்ளார். பாதிக்கப்பட்ட சிறுமி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

இதேவேளை- சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 15 வயதான இன்னொரு சிறுமியை கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 23 வயது இளைஞர் ஒருவர் அழைத்து வந்து வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளார். இளைஞர்கைது செய்யப்பட்டுள்ளார். சிறுமி மருத்துவ சிகிச்சைக்காக போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

(அ-ஒ-5)

## திருட்டைத்தடுக்கும்...

பெரும்பான்மை இனத்தவர்கள் தமிழ் கால்நடைவளர்ப்பாளருக்குச் சொந்தமான கால்நடைகளைத் திருடமுற்பட்டதாகவும், அதனைத் தடுக்கும்போதே பெரும்பான்மை இனத்தவர்களால் கட்டிவைக்கப்பட்டு தாக்கப்பட்டதாகவும் காயமடைந்துள்ள கால்நடை வளர்ப்பாளர் தெரிவித்தார்.

கொக்குத்தொடுவாய்ப் பகுதியில் வசித்துவரும் சிவக்கொழுந்து கந்தசாமி என்ற கால்நடை வளர்ப்பாளரே பெரும்பான்மை இனத்தவர்களால் தாக்கப்பட்ட நிலையில், முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சைபெற்றுவருகின்றார்.

கொக்குத்தொடுவாய்ப் பகுதி தமிழ் மக்களின் கால்நடைகளை வெலிஓயா பகுதியைச்சேர்ந்த பெரும்பான்மை இனத்தவர்கள் தொடர்ச்சியாக திருடிவருவதாக அப்பகுதி தமிழ் மக்கள் தெரிவிக்கின்றனர்.

அவ்வாறு திருடப்படும்போது தடுக்கின்ற தமிழ் மக்களை, பெரும்பான்மை இனத்தவர்கள் தாக்குகின்ற சம்பவங்களும் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதாகவும் அந்தப் பகுதித் தமிழ் மக்கள் தெரிவிக்கின்றனர்.

(ஒ-இ)

## பருத்தித்தீவிலிருந்த...

பட்டுள்ளன.

கடலட்டைப் பண்ணை நடவடிக்கைக்காக சீனர்கள் தீவுப்பகுதிக்கு வருவது தொடர்பில் தொடர்ச்சியாக எழுப்பப்பட்ட ஆட்சேபணைகளின் அடிப்படையில் அந்த நகர்வுகள் சில காலம் இடம்பெறாமல் இருந்தன. இந்த நிலையில் கடந்த 16ஆம் திகதி சீனர்கள் மீண்டும் பருத்தித்தீவுக்குச் சென்றுள்ளனர். இது தொடர்பான செய்தி 'உதயனில்' நேற்று வெளியாகியிருந்தது.

இதனையடுத்து நேற்றுக் காலை அவசர அவசரமாக பருத்தித்தீவிலிருந்த பொருள்களை படகில் ஏற்றிக் கொண்டு எழுவைதீவுக்குச் சென்றுள்ளனர். அங்கு அவை தற்காலிகமாக இறக்கி வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை - பருத்தித்தீவில் சீனர்கள் 40 ஆயிரம் கடலட்டைக் குஞ்சுகளை விட்டிருந்ததாகவும் ஆனால், 100 கடலட்டைகள் வரையிலேயே அவர்களால் இப்போது அறுவடை செய்ய முடிந்திருப்பதாகவும் கூறப்படுகின்றது.

(அ-ஒ-5-125)

# இன்றைய நாள் (ராசிபலன்)



**மேடம்:** கணவன் - மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த பிணக்குகள் நீங்கி, அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளால் தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும்.

**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குடும்பத்தில் உறவினர்களால் செலவுகள் ஏற்பட்டாலும், அதனால் மகிழ்ச்சியே ஏற்படும்.

**மிதுனம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. மற்றவர்களால் மறைமுகத் தொல்லைகள் ஏற்படக்கூடும். குடும்பத்தில் சிறு சங்கடம் ஏற்படும் என்றாலும் பாதிப்பு எதுவும் இருக்காது.

**கடகம்:** அனுகூலமான நாளாக இருக்கும். சகோதர வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். தந்தையிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். சிலருக்கு வீண் செலவுகள் ஏற்படும்.

**சிம்மம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். உறவினர்கள் உதவியுடன் சுபநிகழ்ச்சிக்கான பேச்சுவார்த்தை சாதகமாக முடியும். நீண்டநாள்களாக எதிர்பார்த்த பணம் இன்று கிடைக்கும்.

**கன்னி:** இன்று சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள்வார்கள்.

**துலாம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். தாய்வழி உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். வியாபாரத்தில் விற்பனை சற்று குறைவாகத்தான் இருக்கும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

**தனுசு:** சாதிக்கும் நாளாக அமையும். வாழ்க்கைத்துணை மூலம் எதிர்பாராத பொருள் சேர்க்கை உண்டு. மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும்.

**மகரம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல்கவனம்தேவை. உறவினர்களுடன் கருத்துவேறுபாடுகள் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமை அவசியம்.

**கும்பம்:** செலவுகள் அதிகரிப்பதால் கையிருப்பு குறையும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**மீனம்:** எடுத்த காரியம் அனுகூலமாக முடியும். உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். புதிய முயற்சி சாதகமாக முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## உதவியல்ல, உபத்திரவம்!

இலங்கையின் வடக்கு மாகாணமும், கிழக்கு மாகாணமும் இந்தியப் பிரதமர் மோடியின் கைகளிலேயே முற்றுமுழுதாகத் தங்கியிருக்கின்றன. அந்த மாகாண மக்கள் (தமிழர்கள்) மோடியை முற்றுமுழுதாக நம்புகின்றனர் என்று தமிழகத்தில் வைத்துத் தெரிவித்திருக்கின்றார் ஆளும் பாரதிய ஜனதா கட்சியின் தமிழகத்துக்கான தலைவர் அண்ணாமலை. தமிழர் பகுதிகளில் எங்கும் இந்திய அரசாங்கத்தின் அபிவிருத்திகளே மேற்கொள்ளப்படுகின்றன. ஆதலால், அந்தப் பகுதி மக்கள் அபிவிருத்தியில் மோடியையே நம்பியிருக்கின்றனர் என்றும், அவர் இந்திய ஊடகங்கள் முன்னிலையில் புளகாங்கிதம் கண்டிருக்கின்றார்.

தமிழர்கள் ஒன்றும் இந்திய அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்களை எதிர்பார்த்துக் காத்துக் கிடப்பவர்கள் அல்லர். தமிழர் பகுதிகளில் இந்திய அரசாங்கம் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கின்றது என்பது உண்மைதான். ஆயினும் அவை தமிழர்களுக்கு உரிய அபிவிருத்திகள் அல்ல. அவை இலங்கைக்கானவை. இரு நாடுகளுக்கும் இடையிலான பொதுப்புரிதல் மற்றும் பிராந்திய முக்கியத்துவம் கருதித்தான் அந்த அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வளவு ஏன், மிகச்சொற்ப நாள்களுக்கு முன்னர் இந்திய அரசாங்கம் தனது நிதிப்பங்களிப்பில், தமிழர் பகுதியான யாழ்ப்பாணத்தில் அமைத்த கலாசார மத்திய நிலையத்தைத் தமிழர்களிடம் ஒப்படைக்கவில்லை. மாறாக அந்தக் கலாசார மத்திய நிலையம் கொழும்பிடமே பத்திரமாகக் கையளிக்கப்பட்டது. அது புத்தசாசன அமைச்சின்கீழ் தற்போது பாரப்படுத்தப்பட்டிருக்கின்றது.

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக '13'ஆவது திருத்தத்தை இந்திய அரசாங்கம் முன்வைத்த நாள்முதல் அந்தத் திருத்தத்துக்கு இங்கு ஏற்பட்டிருக்கும் எதிர்ப்பலை மிகப்பெரியது. காணி, பொலிஸ் அதிகாரங்களைக்கூட தமிழர்களுக்கு இன்னமும் பெற்றுத்தராத அந்தத் திருத்தம்தான் தனிநாட்டை உருவாக்கப்போவதாகஇங்கிருக்கக்கூடிய பேரினவாத அரசியல்வாதிகள் விஷமப்பரப்புரையை காலாகாலமாக மேற்கொண்டு வருகின்றமையொன்றும் பரம இரகசியமல்ல. '13' ஆவது திருத்தத்தை முற்றாக நடைமுறைப்படுத்துவேன் என்று எப்போது ரணில் தெரிவித்தாரோ அப்போதிருந்தே அதை முன்வைத்த அடுத்தகட்ட சகுனியாட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டாயிற்று. அந்தத் திருத்தத்தை வைத்து மேற்கொள்ளப்படும் பல்வேறுபட்ட புரளிகளிலும் பொய்ப் பரப்புரைகளிலும் ஒன்றுதான் '13'ஆவது திருத்தம் நடைமுறைப்படுத்தப்பட்டால் வடக்கு – கிழக்கு இந்தியாவிடம் சென்றுவிடும் என்ற கூற்று; மாகாணப் பொலிஸார் இலங்கை இராணுவத்துக்கு எதிராகப் போரிடும் அளவுக்கு நிலைமை மோசமாகும் என்பதும் இப்படியானதொரு பின்னணியில்தான், வடக்கும் கிழக்கும் மோடியின் கைகளில் உள்ளன என்று மடமைத்தனமாகக் குறிப்பிட்டிருக்கின்றார் அண்ணாமலை.


தமது வாக்கு வங்கிகளைத் தக்கவைப்பதற்காக, '13'ஆவது திருத்தத்துக்கு எதிராகப் பொங்கிப் பிரவாகித்துக் கொண்டிருக்கும் விமல் வீரவன்ஸ, கம்மன்பில, வீரசேகர போன்றோருக்கு 'வெறும் வாய்க்குக் கிடைத்த அவல்' போன்றதுதான் அண்ணாமலையின் இந்தக் கருத்து. இனி அடுத்தடுத்த நாள்களில் தென்னிலங்கை ஊடகங்கள் அண்ணாமலையின் கருத்தை மேற்கோள் காட்டுவதைத் தொடர்ந்து அவரின் இந்தக் கருத்து பூதாகரமாகும். இந்திய அரசாங்கத்தின் நிலைப்பாட்டை – விருப்பத்தைத்தான் ஆளும் பாரதிய ஜனதாவின் மாநிலத் தலைவரான அண்ணாமலை வெளிப்படுத்தியிருக்கின்றார் என்ற கருதுகோள் படிப்படியாக மெய்ப்பிக்கப்படும். அதற்குரிய ஏதுநிலைகளைத்தான் அண்ணாமலை தற்போது ஏற்படுத்தியிருக்கின்றார். சிலவற்றை வெளிப்படுத்துவதைப் பார்க்கினும் வெளிப்படுத்தாமல் விடுவதுதான் புத்திசாலித்தனம். ஊடக வெளிச்சத்தை மட்டுமே கருத்திற்கொண்டு ஒரு விடயத்தை வெளிப்படுத்துகின்றபோது அதன் பின்னாலுள்ள ஆபத்தையும் அர்த்தப்பாடுகளையும் புரிந்தும் – தெரிந்தும் வைத்திருப்பது அவசியம். இந்தக் கற்றலை அண்ணாமலை போன்ற அரசியல் கத்துக்குட்டிகளுக்கு முதலில் பாரதிய ஜனதா வழங்க வேண்டும்.

**"கடனறிந்து காலங் கருதி இடனறிந்து**
**எண்ணி உரைப்பான் தலை"**

என்கின்றார் பொய்யாமொழிப் புலவராம் வள்ளுவர். அதாவது தனது கடமை இன்னது என்று தெளிவாக அறிந்து, தன் கடமையைச் செய்வதற்கு ஏற்ற காலமும் நேரமும் இதுதானோ என்று பகுப்பாய்ந்து, தன் கருத்துக்களை சொல்கின்ற இடத்தை ஆராய்ந்து அதன்படி செயற்படுபவனே தூதுவனாக இருக்கவேண்டிய தகுதியைக் கொண்டிருக்கின்றான் என்கிறார் வள்ளுவர். அந்த வகையில் அண்ணாமலை செய்துவிட்டுச் சென்றுள்ள காரியம் தமிழர்களுக்கு உதவியல்ல, பெரும் உபத்திரவம். நீங்கள் உதவிகளைச் செய்யாவிட்டாலும் பரவாயில்லை, உபத்திரவத்தைத் தராதீர்கள். தமிழர்களின் விடுதலைப் போராட்டமும் அவர்களின் அரசியல் வேணவாவும் '13'இனை மையமாகக் கொண்ட உங்கள் கற்பனையைவிட பலமடங்கு அப்பாற்பட்டது.

**நாளொரு நல்வார்த்தை**

"நீங்கள் தான் உங்கள் வாழ்க்கை வரலாற்றை எழுதவேண்டும் அதை, அடுத்தவர்களை எழுத விட்டு விடாதீர்கள்" – ஹார்லி டேவிட்சன்



# பதவியைத் தக்கவைக்கவே வியூகம் வகுக்கிறார் ரணில்

## சிறீதரன் எம்.பி. குற்றச்சாட்டு



கிளிநொச்சி, பெப். 21

தனது பதவியையும் கட்சியையும் தக்கவைக்கவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வியூகம் வகுக்கின்றார் என்று தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வேட்பாளர் அறிமுக நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ரணில் விக்கிரமசிங்கவை ஒரு லிபரல்வாதி என்றுதான் வெளியுலகில் சொல்கின்றனர். ஆனால், அவர் இந்த நாட்டின் ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைத்து, ஜனநாயக ஆட்சி முறையை இல்லாது செய்யும் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றமை துரதிஷ்டவசமானது. ஒரு நாடு பலமாக இருக்கின்றது. அந்த நாட்டினுடைய மக்கள் தங்களுடைய சுயமான பொருளாதார அரசியல் முறைகளை சரியாக வழிநடத்துகின்றார்கள் என்றால், அந்த நாட்டில் ஜனநாயகம் இருக்கின்றது என்று அர்த்தம். ஆனால், அந்த ஜனநாயகம் இந்த நாட்டிலே இல்லை. அந்த ஜனநாயகத்தை இல்லாது செய்கின்ற பணிகளில் மிகப்பெரிய அளவிலே ரணில் விக்கிரமசிங்க ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார். அவரோடு சேர்ந்த பலரும் அதற்காக உழைக்கிறார்கள்.

அவர்கள் மிக இரகசியமான முறையில் பல தந்திரோபாயங்களூடாக, அழிவு நிலையில் இருக்கிற ஐக்கிய தேசியக் கட்சியை நிமிர்த்துவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இந்தத் தேர்தலில்கூட அவர்களின் எண்ணங்களைத்தான் பல்வேறுபட்ட விடயங்களும் நடவடிக்கைகளும் பறைசாற்றுகின்றன. ஆகவே இந்தச் சவால்களை எதிர்கொண்டு, தேர்தலுக்குத் தயாராகின்றோம் என்ற செய்தியை மக்களுக்குச் சொல்லவேண்டும்.

ஏனென்றால், நாங்கள் அடிப்படை உரிமைக்காகவும், வாழ்வியல் உரிமைக்காகவும் இந்தத் தேர்தல் பயணத்தை மேற்கொள்பவர்கள். நாங்கள் இதன் மூலம் நாடு பிடிக்கின்ற விடயங்களை மேற்கொள்பவர்கள் அல்லர். எங்களுக்கு முன்னால் பல போராட்டங்கள் விரிந்து போய் கிடக்கின்றன. பல போராட்டங்கள் எங்களை அழைக்கின்றன. நாங்கள் இந்த மண்ணிலே வாழ வேண்டியதற்காக போராட வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆகவே, போராட வேண்டிய காலத்துக்கான அறிகுறியாக இந்தத் தேர்தலை ஒரு களமாக நாங்கள் பயன்படுத்த வேண்டும் - என்றார். (ம-113)

நாளை 22.02.2023 புதன்கிழமை மாசி 10
சுபநேரம் : 05.01 - 06.31
ராகுகாலம் : 12.31 - 02.01

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேட்பாளர் அறிமுக நிகழ்வு


கிளிநொச்சி, பெப். 21

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் அறிமுக நிகழ்வு, கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, வடக்கு மாகாண முன்னாள் கல்வி அமைச்சர் குருகுலராஜா, வேட்பாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

(ஒ-14-113)

## கண்ணீர்த் துளிகளில் ஈராண்டு நிறைவு



தோற்றம் 09.07.1934 | மறைவு 21.02.2021

அமரர்
**கபிரியேல் செபஸ்ரியாம்பிள்ளை (செட்டியார்)**

செழித்து நின்ற ஆலமரம்
செழிப்பிழந்து சாய்ந்து ஈராண்டு
பெற்றோர் சகோதரர் பிள்ளைகள்
உறவுகளுக்கு மட்டுமல்ல
ஊருக்கே நிழல் தந்து நிமிர்ந்து நின்று
நினைவுகளை
விதைத்துச் சென்ற வீரன் நீ
தாங்கா துயரினிலே தவித்து நிற்கும்-உறவுகள்

**ஏங்கிநிற்கும்
பிள்ளைகள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்
பூட்டப்பிள்ளைகள்.**


Jaffna International Trade Fair
யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை
13 EDITION
MARCH மார்ச் 3 4 5
9.00மு.ப - 7.00பி.ப
Muttraweli Grounds (Next to Jaffna Fort)
முற்றவெளி மைதானம் (யாழ் கோட்டைக்கு அருகில்)
JITF
CONCURRENTLY WITH
Higher Education & Career Exhibition
KALVI JAFFNA 2023
www.jitf.lk
jitf.lk




MAIN SPONSOR TOKYO CEMENT GROUP
ORGANIZED BY LECS LANKA EXHIBITION & CONFERENCE SERVICES (PVT) LIMITED
IN ASSOCIATION WITH CCIY
OFFICIAL PARTNERS
ஸ்டால்களுக்கான முன்பதிவு
RESERVATION FOR STALLS
Imalka: +94 71 7488107, +94 77 1093792 | imalka@saexhibitions.com


## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர்

**இரட்ணம் விக்னேஸ்வரன்**



அவர்கள் 17.02.2023 அன்று இறைபதம் அடைந்தமையையிட்டு அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**தலைவர், விரிவுரையாளர்கள்,
போதனாசிரியர்கள், போதனைசாரா ஊழியர்கள்,
மாணவர்கள், நடனத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

(CS 23601) 1-6

## ஆதன உரிமை பெயர் மாற்ற அறிவித்தல்

**வலிகாமம் வடக்கு பிரதேசசபை மல்லாகம் உப அலுவலகம்**

| | | |
|---|---|---|
| உரிமையாளர் பெயர் | : | பொன்னையா அழகரத்தினம் பெண் பரிபூரணம் |
| விண்ணப்பதாரர் பெயர் | : | திருமதி.அழகரத்தினம் பரிபூரணம் |
| முகவரி | : | 47/10. சங்கானை வீதி. மல்லாகம். |

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் மல்லாகம் உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 20. வல்லை சங்கானை வீதியில் ஆதன இல. 47/10 இல் அமைந்துள்ள மல்லாகம் கோவிற்பற்று மல்லாகம் இறை "தம்பலாவத்தையும் பத்தாவொல்லையும்" என்ற ஆதனம் K. கந்தையா என்ற பெயரில் எமது சோலைவரி ஆதனப் பதிவேட்டில் பதியப்பட்டு காணப்படுகின்றது.

குறித்த ஆதனமானது 20.11.2017 ஆந்திகதிய பிரசித்த நொத்தாரிஸ் நாகேந்திரன் பார்த்தீபன் அவர்கள் முகதாவில் இலக்கம் 163 இல் அத்தாட்சிப்படுத்திய பிரகடனமும் உறுதிப்படுத்தலும் உறுதியால் வெளிப்படுத்தப்பட்டு விண்ணப்பதாரியினால் ஆவணம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. குறித்த ஆதனம் தொடர்பில் விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்ட 163ஆம் இலக்க உறுதியில் ஆதியில் அழகரத்தினம் பெண் பரிபூரணம் அவர்களின் பேரனாகிய கந்தர் கந்தையாவிற்குச் சொந்தமாக இருந்ததாகவும் இவ்வாதனத்தின் மேற்கெல்லைக் காணியினை 1978.05.21 அன்று நொத்தாரிசு இரஞ்சினி இராமலிங்கம் முகதாவில் 151 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப் படுத்திய சீதன உறுதியின் ஆதன அட்டவணையில் விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனத்தின் கிழக்கெல்லை காணியாக கந்தர் கந்தையாவின் ஆதனம் என எழுதப்பட்டுள்ளது. கந்தர் கந்தையா மரண சாதனம் எதுவுமின்றி நிர்வாகப்பத்திரம் எடுக்க வேண்டிய பெறுமதியிலும் குறைவான பெறுமதியுடைய சொத்துக்களை விட்டிறக்க அவரின் சொத்துக்கள் அனைத்தும் குறித்த விண்ணப்பதாரியின் தாயாரும் அவரின் ஒரே பிள்ளையாகிய இராசையா பெண் சின்னம்மாவினை வந்தடைந்ததென்றும் அவரும் மரணசாதனம் எதுவுமின்றி நிர்வாகப்பத் திரம் எடுக்க வேண்டிய பெறுமதியிலும் குறைவான பெறுமதியான சொத்துக்களை விட்டிறக்க அவரின் சொத்துக்கள் அனைத்தும் அவரின் ஒரே பிள்ளையான அழகரத்தினம் பரிபூர்ணம் அவர்களின் தாய்வழி முதுசமாக வந்தடைந்தது என வெளிப்படுத்தப்பட்டுக் காணப்படுகின்றது.

**ஆதன விபரம்**

வடமாகாணம். யாழ்ப்பாண மாவட்டம். வலிகாமம் வடக்குப் பகுதி. மல்லாகம் கோவிற்பற்று மல்லாகம் இறை "தம்பலாவத்தையும் பத்தாவொல்லையும்" நிலப்பரப்பு இரண்டும் (நில.பர 2) பகுதியளவான வீட்டுக்கட்டடமும் கிணறும் தூர்வையும் இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் எம். சண்முகநாதன் அவர்களால் 16.11.2017 ஆம் திகதியிட்டு 3424 ஆம் இலக்கத்தில் அளந்து வரைந்த நில அளவைப்படத்தில் துண்டு 1 ஆகக்காட்டப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| கிழக்கு | : | அழகரத்தினத்தினதும் இவ்வுறுதிப்படுத்தலினை மேற்கொள்பவரினதும் மிகுதி ஆதனமும் |
| வடக்கு | : | வல்லிபுரம் மனைவி கனகசோதியின் ஆதனமும் செல்லத்துரை மனைவி கனகம்மாவின் ஆதனமும் |
| மேற்கு | : | இவ்வுறுதிப்படுத்தலினை மேற்கொள்பவரின் மிகுதி ஆதனம் |
| தெற்கு | : | கையொழுங்கை இவ்வெல்லைப்படி இதடங்கலும் தெற்கே காணப்படும் கையொழுங்கையினால் போக்குவரத்து செய்யும் பாதைப்பாவிப்புரித்தும் |

மேற்குறித்த ஆதனத்தை பொன்னையா அழகரத்தினம் பெண் பரிபூரணம் என்னும் பெயரில் ஆதன பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் பொன்னையா அழகரத்தினம் பெண் பரிபூரணம் பெயருக்கு ஆதன உரிமை மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதன உரிமை மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும். வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. சோமசுந்தரம் சுகிர்தன்
தவிசாளர்
வலிகாமம் வடக்கு பிரதேசசபை
காங்கேசன்துறை (தொல்லங்கலட்டி)**

(CS 23589)(3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 25 . 06 . 1928

விண்ணில் 04 . 03 . 2003

## சின்னத்துரை இராசையா


திதி:- மாசிமாத பூர்வபட்ச பிரதமை

ஈர்பத்து வருடங்கள் இன்றுபோல் உள்ளதையா
ஊர்கூடி அழுதிட்டு உற்றவரும் போய்விட்டர்
ஏற்கவில்லை எம்மனது எமை விட்டு நீர் போனதை
கார்போன்று உள்ளதையா கண்கள் இரண்டும் எங்களுக்கு
பேர் கொண்டு வாழ்ந்த நீங்கள் பெரியார் போல் எமைக் காத்தீர்
சீராக எமை வளர்த்து சிறப்புடனே வாழவைத்து
பார்போற்ற நாம் வாழ்வதை பரிவுடனே பார்க்கவின்றி
வீர்கொண்டு அழைத்தானோ விண்ணவும் உமை வேண்டி

*விழிநீரை வழி நீராக்கி*
*விண்ணவை பிரார்த்திக்கும்*
**குடும்பத்தினர்.**

ராச சௌந்தர்யம்,
மஞ்சத்தடி தெற்கு, இணுவில். (CS,23543)4,6

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 27 . 10 . 1974

மறைவு 22 . 01 . 2023

## அமரர் மகேஸ்வரன் தனேசன்

பாசமுடன் நேசமும் ஊட்டி
பாரில் வாழ பல அறிவுரைகூறி
ஆசை ஆசையாய் எமை வளர்த்த தந்தையே!
கடமைகள் பலவும் கனிவுடன் முடித்து
நேரிய வாழ்வின் சிகரமாய் மிளிர்ந்து
வாழ்வாங்கு வாழ வழிசமைத்த அப்பாவே!
நீங்கள் சென்ற வழி பார்த்தபடி
உங்களைத் தேடுகின்றோம்
சொல்லாமல் சென்றதேனோ?

**மனைவி, பிள்ளைகள்.**

கடந்த 22.01.2023 ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர் **அமரர் மகேஸ்வரன் தனேசன்** அவர்களின் வீட்டுக்கிருத்தியம் இன்று (21.02.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

சிவபூதவராயர் வீதி,
சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்.

**குடும்பத்தினர்.** (CS/49111)4;6

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த (23.01.2023) திங்கட்கிழமை அன்று சிவபதம் அடைந்த எங்கள் குடும்பத்தலைவி

## அமரர் திருமதி
## நடராசா தங்கமலர்

(உரிமையாளர் : மைதிலி நகை மாடம் - தனியார் நிறுவனம்)

மலர்வு 29.12.1949

உதிர்வு 23.01.2023

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் நேற்று (20.02.2023) திங்கட்கிழமை காலை 06.00 மணியளவில் புனித சாட்டி தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (22.02.2023) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(CR 39254)(3/6))

**குடும்பத்தினர்**
தொ.பேசி 077 376 8952
உரிமையாளர்: மைதிலி நகை மாடம் - தனியார் நிறுவனம்
இல. 55, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவமனையின் புனரமைப்பு நிதி வேறு தேவைகளுக்கு ஒதுக்கப்பட்டது

## சுகாதாரப் பணிப்பாளருக்கு கையளித்தமனுவில் பொதுமக்கள் குற்றச்சாட்டு

வன்னேரிக்குளம் மருத்துவமனையைப் புனரமைக்குமாறு கிராம பொதுஅமைப்புகள் கிளிநொச்சி பிராந்திய சுகாதாரப் பணிப்பாளரிடம் மனுவொன்றைக் கையளித்துள்ளனர்.

அதில் வன்னேரிக்குளம் மருத்துவமனையின் புனரமைப்புக்கென ஒதுக்கப்பட்ட நிதி வேறு சில தேவைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்து பொதுமக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

அந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

1953 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட மருத்துவமனைக் கட்டடம் தற்போது உடைந்து விழும் நிலையில் காணப்படுகின்றது.

கடந்த காலங்களில் மருத்துவமனை புனரமைப்பதற்கு என ஒதுக்கப்பட்ட நிதி வேறு வேலைகளுக்கும் பிற இடங்களுக்கும் ஒதுக்கப்பட்டதாக அறிகின்றோம்.

இந்த நிலையில் மருத்துவமனையைப் புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கும்படி பொது அமைப்புகளாகிய நாம் தங்களிடம் பணிவாக வேண்டுகின்றோம் - என்றுள்ளது.

இதேவேளை வன்னேரிக் குளத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், வன்னேரிக்குளம் மருத்துவமனை புனரமைப்புக்கு என ஒதுக்கப்பட்ட 40 மில்லியன் ரூபா வேறு தேவைக்கு சுகாதாரத் தரப்பால் மாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவித்திருந்தார்.

(ஒ-14-13)


### மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்துத் தரப்படும்.
ஒரு சதுர அடி - 80 ரூபாய்.

077 334 1281 (22918) 4,6)

### வீடு வாடகைக்கு

கச்சேரி நல்லூர் வீதியில் தளபாட வசதிகளுடன் வீடு வாடகைக்குண்டு. பணிபுரிபவர்கள் கல்வி கற்பவர்கள் குழுவாக தங்குவதற்கு அல்லது நிறுவன பாவனைக்கு குறுகிய கால அடிப்படையில் மட்டும் வழங்கப்படும். (CS 23594) (3/6)

075 979 9161, 077 769 9212

### பெயர் மாற்றம்

1978 ஆம் ஆண்டு தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலையில் பிறந்த எனது பெயர் **சத்தியசீலன்.** ஆயினும் பிறப்பு அத்தாட்சி பதிவேட்டில் **சத்தியசிவம்** என பதிவாகியுள்ளது. ஆதலால் எனது பெயர் **சத்தியசீலன்** என்பதனை மீண்டும் உறுதிப்படுத்துவதோடு இலங்கை ஜனநாயக குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன். (CS 23587)(3/6)

இரத்தினம் சத்தியசீலன்

### பதவி வெற்றிடங்கள்

**இல: 555, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். என்னும் முகவரியில் அமைந்துள்ள ஸ்ரீ மாருதி பதிப்பகத்திற்கு பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கு வேலை முன் அனுபவம் உள்ளவர்கள் மற்றும் பழக விரும்புபவர்கள் தேவை.**

1. கணனி வடிவமைப்பாளர்
2. புத்தகம் கட்டுனர்
3. இயந்திர இயக்குநர் (Opset)
4. வரவேற்பாளர் (பெண்)

தொடர்புக்கு :-
077 791 7680

### 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 25 . 07 . 1955

மறைவு 21 . 02 . 2014



**வீரசிங்கம் செல்வநாதன்**
(ஓய்வுபெற்ற இலங்கை வங்கி உத்தியோகத்தர்)

ஆண்டுகள் ஒன்பது கடந்து விட்டது அப்பா
உம்மை நினைக்கின்ற பொழுது
நிலையில்லா இவ் உலகில்
நீர் விட்டுச் சென்ற அன்பு மட்டும்
நிலையாகி நினைவுகளாகி இருக்கின்றது அப்பா
உம் நினைவுகளை எம் ஆயுள் முழுவதும்
நினைத்துப் பார்க்கின்ற பொழுது
ஆறாத எம் மனம் கண்களில் நீர் வடிக்கின்றது
அப்பா

அப்பா என்றும் உம் அன்பிற்காக ஏங்கும்
குடும்பத்தினர்.

(CS/23585)4,6

### நிதி அமைச்சு
### ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச்சபை

**2022 ஆம் ஆண்டின் இரண்டாவது அரையாண்டுக்கான படிவம் II அறிக்கை (பங்களிப்புத் தொகை விபரம்) சமர்ப்பித்தல்**

**யாருக்கு ஏற்புடையது** — ஆர்-1 பணம் அனுப்பும் படிவத்தின் மூலம் பங்களிப்புத் தொகை செலுத்தும் தொழில் வழங்குநர்கள்

**இறுதித் திகதி** — 2023 பெப்ரவரி 28 ஆம் திகதிக்கு முன்னர்

**ஒப்படைக்க வேண்டிய ஆவணங்கள்**
- சரியாக மற்றும் தெளிவாக பூரணப்படுத்தப்பட்ட 2022 ஆம் ஆண்டின் இரண்டாவது அரையாண்டு அறிக்கை (படிவம் II)
- சாராம்ச பக்கங்கள்
- இணைக்கக் கூற்றுக்கள்

**தங்களது விசேட கவனத்திற்கு**

1980ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை சட்டத்தின் மற்றும் 1993ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க திருத்தச் சட்டத்தின் பிரகாரம் முழுமையான மற்றும் சரியான அறிக்கைகளை உரிய தினத்திற்கு அல்லது அதற்கு முன்னர் அனுப்புதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் அறிக்கைகளுக்கு தாமதமாகும் ஒவ்வொரு மாதத்திற்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்காக அறிக்கையில் குறிப்பிடப்படும் ஆறுமாத மொத்தப் பங்களிப்புத் தொகையிலிருந்து 1% தண்டப்பணமாக தொழில் வழங்குநர்களினால் செலுத்த நேரிடும் என்பதையும் தயவுகூர்ந்து கவனத்திற்கொள்ளவும்.

**அறிக்கைகளை ஒப்படைக்க முடியுமான அலுவலகங்கள்**

★ பிரதான அலுவலகம்

முகாமையாளர் - அங்கத்துவக் கணக்கு (பாரிய வகை)
ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச்சபை
இல.807, 20ம் மாடி, மெஹெவர பியெஸ,
நாராஹேன்பிட்டி, கொழும்பு 05.

தொ.இல.: 0117 747216

★ கொழும்பு கோட்டை அலுவலகம்

ஊ.ந.பொ.நி.அலுவலகம்
இல. 85, சீ பேன்க்,
ஹேமாஸ் கட்டிடம், யோர்க் வீதி,
கொழும்பு 01.

தொ.இல. : 0112 321184

★ கண்டி பிராந்திய அலுவலகம்
(D, E,F) உள்ள ஊ.சே.நி இலக்கங்களுக்கு

பிராந்திய முகாமையாளர் - கண்டி
ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச்சபை
இல.79, வீடமைப்புச் செயலகம்,
யட்டிநுவர வீதி, கண்டி.

தொ.இல.: 081 2232446

★ ஹம்பாந்தோட்டை பிராந்திய அலுவலகம்
(G,H,W) உள்ள ஊ.சே.நி.இலக்கங்களுக்கு

பிராந்திய முகாமையாளர் - ஹம்பாந்தோட்டை
ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச்சபை
இல.57, வில்மட் வீதி,
ஹம்பாந்தோட்டை.

தொ.இல. : 047 2222462

தவிசாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி
ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை


### மரண அறிவித்தல்



பிறப்பு 17.09.1942 — இறப்பு 20.02.2023

**திருமதி ஞானேஸ்வரி இலங்கநாயகம்**

திருமதி ஞானேஸ்வரி இலங்கநாயகம் அவர்கள் நேற்று (20.02.2023) திங்கட்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் இலங்கநாயகம் அவர்களின் அன்பு மனைவியும், நாகலதா, இலங்காதரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இல . 60 வளாக வீதி,
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம்.

தகவல்:
இ.இலங்கநாயகம் (கணவர்)
கணவர் : 077 423 7536
மகள் : 077 604 7749
மகள் : 001647 899 7274

(CR 39284) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



















## அலியான்ஸ் லங்கா சிறுவர் பாதுகாப்பு தலைக்கவசங்களை நன்கொடையாக வழங்குவதன் மூலம் வீதியில் சிறுவர்களின் பாதுகாப்பை ஊக்குவிக்கிறது

இலங்கைத்தாயின் சிறுவர்களே எமது தேசத்தின் எதிர்காலம். அவர்கள் வாழ்வின் சவால்கள் மற்றும் துன்பங்களிலிருந்து பாதுகாக்கப்பட்டு, பாதுகாப்பான சூழலில் வளர்க்கப்படவேண்டியவர்கள். இது அவர்கள் நம்பிக்கையுடன் தங்கள் கனவுகளைத் தொடர்ந்து முன்னெடுத்து, நனவாக்க வழிகோலும் என்று அலியான்ஸ் லங்கா நம்புகிறது. அதனால்தான் இலங்கையிலுள்ள சிறுவர்களுக்கு நிலைபேண்தகு எதிர்காலத்தை உறுதிப்படுத்துவதற்கு தேவையான உதவியை வழங்குவது அலியான்ஸ் லங்கா நிறுவனம் முக்கிய கவனம் செலுத்தும் பகுதிகளில் ஒன்றாகும். இதைப் பற்றி மேலும் ஆய்வு செய்ததில், கிராமப்புறங்களில் தலைக்கவசம் அல்லது போதிய பாதுகாப்பு இல்லாமல் மோட்டார் சைக்கிள்களில் பின் ஆசனத்தில் அமர்ந்து பயணிக்கும் சிறுவர்களின் எண்ணிக்கை மிக அதிகமாக இருப்பது கண்டறியப்பட்டது.

இவ்வாறு, இலங்கையின் வீதிகளில் சிறுவர்கள் பாதிக்கப்படக்கூடிய ஒரு பிரிவாக மாறியிருப்பதை புரிந்துகொண்ட அலியான்ஸ் லங்கா, வீதியில் செல்லும் சிறுவர்களின் பாதுகாப்பை அதிகரிப்பதற்கும் அதனை ஊக்குவிப்பதற்கும் உதவும் முயற்சியை ஆரம்பித்துள்ளது. அலியான்ஸ் லங்கா தனது வலையமைப்பில் அடங்கியுள்ள பல்வேறு இடங்களில் 1,200 சிறுவர் பாதுகாப்பு தலைக்கவசங்களை நன்கொடையாக வழங்குவதன் மூலம் இதனை நிறைவேற்றி வருகின்றது. அதன்படி, நாடளாவிய ரீதியில் அலியான்ஸ் வலையமைப்பின் கீழுள்ள 24 இடங்களில் சிறுவர் பாதுகாப்பு தலைக்கவசங்கள் நன்கொடையாக வழங்கியுள்ளது. தரம் 1-5 வரை கல்வி கற்கும் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு இலங்கை பொலிஸாரின் வழிகாட்டலின் கீழ் அலியான்ஸ் லங்காவினால் பாதுகாப்பு தலைக்கவசங்கள் வழங்கப்பட்டன. இந்த முயற்சி அலியான்ஸ் லங்கா நிறுவனத்தின் "சமூகநலன்" முயற்சிகளுக்கு பங்களிக்கும் என்பதுடன், இதன் மூலம் சமூக மேம்பாடு மற்றும் சமூக உள்ளடக்கத்தை அதிகரிக்கும் என நம்புகிறது.

# பாதீடு மீதான வாக்கெடுப்புக்காகவே எனக்குத் தடைவிதித்தார் ஆர்னோல்ட்

## அடுத்த அமர்வில் கட்டாயம் பங்கேற்பேன் என மாநகரசபை உறுப்பினர் பத்மமுரளி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 21

யாழ்ப்பாணம் மாநகரசபையின் அடுத்த அமர்வில் பங்கேற்பேன் என்று அறிவித்துள்ளார், அடுத்த ஒரு மாதத்துக்கு சபை அமர்வுகளில் பங்கேற்பதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ள உறுப்பினரான பாலசுப்பிரமணியம் பத்மமுரளி. "எனக்கு விதிக்கப்பட்டுள்ள தடை, முதல்வர் ஆர்னோல்ட் முன் வைத்துள்ளார். பாதீடு மீதான வாக்கெடுப்பை தனக்குச் சாதகமாக்கிக் கொள்வதற்கான ஒரு சதி முயற்சியே" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:

யாழ். மாநகரசபை, சபை அமர்வின் போது ஏற்பட்ட விவாதம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய நான் மாநகர சபை உறுப்பினர்கள் 'வைக்கோல் பட்டறை நாய்கள் போல்' செயற்படக்கூடாது என்று குறிப்பிட்டிருந்தேன். அதனைக் காரணம்காட்டி அடுத்துவரும் ஒருமாத காலத்துக்கு சபை அமர்வுகளில் நான் பங்கேற்கமுடியாது என்றும் எனக்குரிய மாதாந்தச் சம்பளம் வழங்கப்படமாட்டாது என்றும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருப்பதாக நான் அறிந்து கொண்டேன்.

குறித்த விவாதத்தின்போது நான் தனிநபர் யாரையும் நோக்கியோ அல்லது குறிப்பிட்டோ குறித்த வாக்கிய பிரயோகத்தினைச் செய்யவில்லை. பொதுவாக சபை அமர்வின் ஒரு விடயம் தொடர்பான விவாதத்தின்போது பொதுவாக தெரிவித்திருந்தேன்.

மாநகர கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் சபை நடவடிக்கைகளுக்குத் தொடர்ந்து குழப்பம் விளைவிக்கும்போது மட்டுமே, குழப்பம் விளைவிக்கும் உறுப்பினரை வெளியகற்றுவதற்கோ அல்லது கூட்டங்களில் பங்கேற்பதனைத் தடை செய்யவோ இடமுண்டு. இவ்வகையில் நான் குறிப்பிட்ட வாக்கியத்துக்கு சில கௌரவ உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்தபோது சபை நடவடிக்கைகளுக்கு குந்தகம் ஏற்படாத வண்ணம் கூட்டத்தில் பங்கேற்காமல் நானாக வெளியேறி விட்டேன்.

யாழ்.மாநகரசபையின் 2023 ஆம் ஆண்டுக்கான பாதீடு அடுத்த வாரம் சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில் என்னை அதில் பங்கேற்காமல் செய்யும் வகையில் தடைசெய்து என்னுடைய சபை நடவடிக்கைகளை முடக்கி அதன்மூலம் பாதீட்டின் இரண்டாம் வாசிப்பைச் சாதகமாக்கிக் கொள்வதற்கு கௌரவ முதல்வர் மேற்கொண்ட ஒரு நடவடிக்கையே இதுவாகும்.

அத்துடன் வைக்கோல் பட்டறை நாய் என்பது பொதுவாக வழக்கில் உள்ள ஒரு மொழிநடையாகும். இது சபைக்கு ஒவ்வாத வார்த்தை என்று கருதமுடியாது. ஏனெனில் குறித்த மொழிநடை ஒரு கருத்தினை சொல்வதற்கு அல்லது புரியவைப்பதற்கு பயன்படுத்தப்படும் சொற்றொடர் ஆகும்.

வைக்கோல் பட்டறை நாய் என்னும் வாக்கியம் ஒரு சாட்டு வாக்கியமாகும். வைக்கோல் பட்டறை அருகே அமர்ந்திருக்கும் நாய் தானும் வைக்கோலை தின்னாது (முடியாது) மாட்டினையும் தின்னவிடாது. அதுபோல் தனக்கும் எடுத்துக் கொள்ளாமல் பிறருக்கும் கொடுக்காமல் இருப்பவர் என்பது அதனுடைய விளக்கம் ஆகும்.

உதாரணமாக ஒருவன் தன்னிடம் இருக்கும் பந்தை விளையாடவும் தரமாட்டான். அதேசமயம் தானும் விளையாடமாட்டான் எனின் அவன் ஒரு வைக்கோல் பட்டறை நாய் என்ற சாட்டு வாக்கியம் கொண்டு விளக்கம் கொடுப்பது எல்லோரிடமும் இருக்கும் பேச்சு வழக்கமாகும்.

ஆக நான் எந்த ஒரு தனிபரை நோக்கியும் பிறழ்வான எந்த ஒரு வார்த்தைப் பிரயோகத்தையும் செய்யவில்லை என்பதுடன் பொதுவாக எல்லோருடைய பேச்சு மொழியில் இருக்கும் வாக்கியத்தினையே குறித்த விவாதத்தின்போது காரணத்துடன் தெரிவித்திருந்தேன். அத்துடன் அவ்வாக்கியத்தைக் கூறியதனால் எழுந்த சர்ச்சையை அடுத்து சபை நடவடிக்கைகளுக்கு குந்தகம் விளைவிக்காமல் நானாகவே சபையிலிருந்து வெளியேறிவிட்டேன். அதன் பிற்பாடே குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

எனவே காரணமில்லாமல் நன்கு திட்டமிட்டு சபை என்னை அமர்வுகளில் பங்கேற்காமல் தடை செய்ததுடன் எனக்கான மாதாந்தக் கொடுப்பனவை நிறுத்தியமையும் சட்டவிரோதமான செயற்பாடு ஆகும். அதனை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. அத்துடன் எதிர்வரும் பாதீடு தொடர்பான சபை அமர்வுகளில் 'நான் பங்கேற்பேன் என்பதுடன் அவ்வாறு நான் பங்கேற்பதை தன்னுடைய நலன் கருதி கௌரவ முதல்வர் தடுத்து நிறுத்தும் பட்சத்தில் மிகக்கடுமையான சட்ட நடவடிக்கைக்குச் செல்லவேண்டி ஏற்படும் - என்றுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ"

# மரண அறிவித்தல்

பிறப்பு
12 . 11 . 1967



இறப்பு
20 . 02 . 2023

## திரு.அருச்சுனலிங்கம் உதயதேவன்

கொழும்பை பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட அருச்சுனலிங்கம் உதயதேவன் அவர்கள் நேற்று (20.02.2023) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அருச்சுனலிங்கம் மற்றும் நகுலாம்பிகை தம்பதியரின் செல்வப் புதல்வனும், இராஜினியின் அன்புக் கணவரும், சந்தோஷ், அபிஷா ஆகியோரின் அன்பு அப்பாவும், காலஞ்சென்றவர்களான சதாசிவம் ஈஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், சத்தியதேவன் (டுபாய்), சுந்தரவடிவு, வந்தியதேவன், சுந்தரவதனி (லண்டன்), சந்திரவதனி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.02.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, நண்பகல் 12.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
074 17 26 294

(CS 23604) 1-6

# மரண அறிவித்தல்



## திருமதி சுகிர்தம் அர்னால்ட்

திருமதி சுகிர்தம் அர்னால்ட் அவர்கள் தனது 94 ஆவது வயதில் கடந்த (17.02.2023) அன்று இறைபதம் அடைந்துவிட்டார் என்பதை அறிவிப்பதில் வருந்துகிறோம்.

அன்னார் காலஞ்சென்ற திரு. ராபர்ட் ஆர் செல்வதுரை (நிரந்தர நீதி அமைச்சின் செயலாளர்) மற்றும் காலஞ்சென்ற திருமதி லில்லி செல்வதுரை ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்ற திரு. ஜோயல் தர்மராஜா அர்னால்டின் அன்பு மனைவியும், ரொஹான், ஜயந்தா, கிறிசாந்தா மற்றும் ஆனந்தன் அவர்களின் அன்புமிகு தாயும் காலஞ்சென்ற காட்வின் செல்வதுரை, மறைந்த பரிமளம் பார்ட்லெட் காலஞ்சென்ற சித்ரன் செல்வதுரை மற்றும் காலஞ்சென்ற இந்திரன் செல்வதுரை ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுஜாதா அபிராமி, வினோதினி மற்றும் மீராவின் அன்பு மாமியாரும், ரோசினி, சுஜானி, அஹ்ரன், ரம்யா, காலஞ்சென்ற தர்ஷன், விகேஷ், சுகன்யா, சந்தனா மற்றும் தர்மன் ஆகியோரின் அன்பான பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை இன்று (21.02.2023) செவ்வாய்க் கிழமை மானிப்பாய் நவாலி தேவாலய வீதியில் உள்ள அன்னாரின் 'Joy Cot' இல்லத்தில் பார்வைக்காக வைக்கப்பட்டு மாலை 04.00 மணிக்கு மானிப்பாய் கிறிஸ்தவ கல்லறையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 23603) 1-6

# மரண அறிவித்தல்



தோற்றம்
16.06.1928

மறைவு
20.02.2023

## சிவலை குஞ்சி

கைதடி தெற்கு, கைதடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவலை குஞ்சி நேற்று (20.02.2023) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பன் மானங்குட்டி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தன் பார்வதி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிவலையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கணபதி, நாகன், பண்டாரி, கட்டையன் மற்றும் செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், நாகம்மா மற்றும் காலஞ்சென்றவர்களான நாகி, குஞ்சி, செல்லன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், மணி, சின்னம்மா, கணேசன், பரமேஸ்வரி, இரத்தினம், தவமணி, காலஞ்சென்ற நாகேந்திரன் மற்றும் மல்லிகாதேவி, செல்வமலர் ஆகியோரின் பாசமிகு தாயாரும், இலட்சுமியின் சிறிய தாயாரும், சின்னவி, காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், இராஜபூபதி, வேலுப்பிள்ளை மற்றும் தவமணி, தம்பிஐயா, சறோஜாதேவி (பிரான்ஸ்), திருச்செல்வநாதன், பஞ்சலிங்கம் மற்றும் காலஞ்சென்ற கதிரவேலு ஆகியோரின் பாசமிகு மாமியாரும், யசோதா, வசந்தா (ஜேர்மனி), தெய்வேந்திரம் (ஜேர்மனி), ரவிதீஸ் (லண்ட்ன), பிரபாகலேந்திரன் (லண்டன்), பற்குலேந்திரன், ராதா (ஜேர்மனி), குலமங்களம், ஜெனிதாமதி (சுவிஸ்), சசிலேந்திரன் (சுவிஸ்), சுகேந்திரமதி (சுவிஸ்), பபிலேந்திரன், கனோஜமதி (லண்டன்), கௌஜியாந் (லண்டன்), கனுஷா (லண்டன்), பிரதி, ஜென்ஷா, பற்குணராஜா (லண்டன்), துஸ்யந்தன் (லண்டன்), தனுஷா (லண்டன்), பிரசன்னா (ஜேர்மனி), வனுஷா, விஜயகுமார் (லண்டன்), காலஞ்சென்ற சந்திரமோகன் மற்றும் சுதாகர், பிரபு, இளவரசி (லண்டன்), பிருந்தா (சுவிஸ்), கனோத் (லண்டன்), வினோத் (பிரான்ஸ்), ஜெனாத் (பிரான்ஸ்), யசோதரா (லண்டன்), மயூரன் (பிரான்ஸ்), லியூரன் (சுவிஸ்), மனோஜ் (பிரான்ஸ்), தேனுகன் (பிரான்ஸ்), அருண்ஜெயா (பிரான்ஸ்), கந்தசாமி (கனடா), ஜெயந்தி, வசந்தி, ரவீந்திரன் (லண்டன்), சுகந்தி (லண்டன்), கோபிராஜ் (லண்டன்), காலஞ்சென்றவர்களான குகேந்திரன், இராசேந்திரம் மற்றும் ஜீவகதாஸ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.02.2023) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 3.30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரியான் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## '13'ஐ...

'13'ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தவேண்டும் என்று இந்தியாவில் குரல்கள் வலுத்துவரும் நிலையிலேயே அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டுள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

அரசமைப்பின் '13'ஆவது திருத்தச் சட்டத்தை வைத்துக்கொண்டு இலங்கையை அடக்கி ஆள இந்தியா முனைகின்றது. அதேவேளை, வடக்கு - கிழக்கு தமிழ் அரசியல் தலைவர்களும் இந்தத் திருத்தச் சட்டத்தின் ஊடாக தனிநாடு கோருகின்றார்கள். காணி, பொலிஸ் அதிகாரங்கள் இன்னமும் பகிரப்படவில்லை என்று கூறி அதியுச்ச அதிகாரப் பகிர்வை அவர்கள் வலியுறுத்துகின்றார்கள்.

இலங்கை பௌத்த - சிங்கள நாடு. மகா சங்கத்தினர் '13'ஆவது திருத்தத்துக்கு அடியோடு எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர். இவ்வாறான நிலையில் '13'ஆவது திருத்தச் சட்டம் எதற்கு? இந்தியாவின் அழுத்தங்களுக்கு அடிபணியாமல் அதை முழுமையாக நீக்கவேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியபோல் '13'ஆவது திருத்தம் வேண்டாம் எனில் நாடாளுமன்றத்தில் 22 ஆவது திருத்தச் சட்டத்தைக் கொண்டுவந்து அதை இல்லாதொழிக்கவேண்டும். இதற்கு எமது முழுமையான ஆதரவை வழங்குவோம். ஆளும்கட்சியிலும், எதிரணி வரிசைகளில் உள்ளவர்களில் பெரும்பாலானவர்கள் '13'ஆவது திருத்தச் சட்டத்தை விரும்பவில்லை. எனவே, இலங்கைக்குச் சாபக்கேடான '13'ஆவது திருத்தச் சட்டத்தை இல்லாதொழிக்க கட்சி, பேதமின்றி அனைவரும் ஓரணியில் திரளவேண்டும் - என்றனர். (அ-ஒ-5-22)

## நாடாளுமன்றத்தை...

அரசமைப்பின் 70 (1) (அ) உறுப்புரையின் பிரகாரம், தற்போதைய நாடாளுமன்றம் முதல்முறையாக கூடுவதற்கு நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து இரண்டு ஆண்டுகள் 6 மாதங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதியில், ஜனாதிபதியால் நாடாளுமன்றத்தைக் கலைக்கமுடியும்.

ஏழாவது நிறைவேற்று ஜனாதிபதியான கோத்தாபயவின் தலைமையில், ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் ஆரம்ப அமர்வு 2020 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 20 ஆம் திகதி கூட்டப்பட்டது. முதல் அமர்வு இடம்பெற்று நேற்று நள்ளிரவுடன் இரண்டு வருடங்களும் ஆறு மாதங்களும் நிறைவடைந்துள்ளன. எனவே, கோத்தாபயவின் பதவி விலகலின் பின்னர் அரசமைப்பு ரீதியாக ஜனாதிபதியான ரணில் விக்கிரமசிங்கவுக்கு, அரசமைப்பின் 70 (1) (அ) உறுப்புரையின் பிரகாரம் நாடாளுமன்றை கலைக்கும் அதிகாரம் கிடைக்கப்பெற்றுள்ளது. (அ-ஒ-இ)

## குண்டுகளுக்கு...

கண்ணீர்ப்புகைக் குண்டுகளாலோ அல்லது நீர்த்தாரைப் பிரயோகங்களாலோ எமது பயணத்தைத் தடுக்கமுடியாது. அதற்கு நாம் அஞ்சப்போவதும் இல்லை. தேர்தலை நடத்தக்கோரும் போராட்டம் தொடரும் - இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சூளுரைத்தார்.

உள்ளூராட்சிசபைத் தேர்தலை நடத்துமாறு வலியுறுத்தி ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தேசிய மக்கள் சக்தியால் நேற்று முன்னெடுக்கப்பட்ட போராட்டங்கள் மீது கண்ணீர்ப்புகைக்குண்டு தாக்குதல்களும், நீர்த்தாரைப் பிரயோகங்களும் மேற்கொள்ளப்பட்டன.

ஐக்கிய மக்கள் சக்தியின் போராட்டம் கொழும்பிலும், தேசிய மக்கள் சக்தியின் போராட்டம் குருநாகலிலும் இடம்பெற்றது.

உள்ளூராட்சிசபைத் தேர்தலை ஒத்திவைக்காமல், அதனை உடன் நடத்துமாறு வலியுறுத்தி ஐக்கிய மக்கள் சக்தியால் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணி மருதானை, தொழில்நுட்பக் கல்லூரி சந்தியில் தடுத்து நிறுத்தப்பட்டது. இந்தப்போராட்டத்துக்கு பொலிஸார் நீதிமன்ற தடைஉத்தரவு கோரியிருந்தாலும், நீதிமன்றம் அதனை வழங்கவில்லை. எனினும், கொழும்பில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.

தொழில்நுட்பக் கல்லூரி சந்தியில் படைகள் குவிக்கப்பட்டன. போராட்டக்காரர்கள் முன்னோக்கிச் செல்வதற்கு இடமளிக்கப்படவில்லை. இதனால் பதற்ற நிலை உருவானது. பாதுகாப்புத் தரப்பினருக்கும், ஐக்கிய மக்கள் சக்தியின் பிரமுகர்களுக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. இறுதியில் நீர்த்தாரைப் பிரயோகமும், கண்ணீர்ப்புகைக்குண்டுத் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டன. எனினும் போராட்டக்காரர்கள் அங்கிருந்து அகலவில்லை. அந்த வளாகத்திலேயே கூட்டத்தை நடத்தினர். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் உள்ளிட்ட கட்சி பிரமுகர்கள் பங்கேற்று உரையாற்றினர்.

சஜித் அங்கு தெரிவித்ததாவது:-

எமது பேரணிக்கு நீதிமன்றம் தடைவிதிக்கவில்லை. அப்படிஇருந்தும் அடக்குமுறை கையாளப்பட்டுள்ளது. இப்படியான சிறுபிள்ளைத்தனமான அரசியல் விளையாட்டை அரசாங்கம் கைவிடவேண்டும். தேர்தலைக்கோரியே நாம் வீதிக்கு இறங்கியுள்ளோம். எமது இலக்கை அடையும் வரை பின்வாங்கப்போவதில்லை. எல்லா வழிகளிலும் எமது போராட்டம் தொடரும். பாதுகாப்புப் படைகளைக் கொண்டு எமது பயணத்தை தடுக்கமுடியாது. நாளை (இன்று செவ்வாய்க்கிழமை) 5 கூட்டங்கள் நடத்தப்படும் - என்றார்.

அதேவேளை, தேசிய மக்கள் சக்தியின் போராட்டம் குருநாகல் நகரில் இடம்பெற்றது. இந்தப் போராட்டத்தைக் கலைப்பதற்கும் நீர்த்தாரைப் பிரயோகம் மற்றும் கண்ணீர்ப்புகை குண்டுத் தாக்குதல் என்பன மேற்கொள்ளப்பட்டன. (அ-ஒ-44)

## சுதந்திரநாள்...

சட்டத்தரணி கே.வி.தவராஜா நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டினார்.

75ஆவது சுதந்திரதினத்தை முன்னிட்டு வடக்கிலிருந்து கிழக்கு நோக்கிய பேரணியில் கலந்துகொண்டார்கள் என தெரிவு செய்யப்பட்ட 7 பேருக்கு எதிராக யாழ்ப்பாண பொலிஸார் தாக்கல் செய்த வழக்கு யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது சட்டத்தரணி தவராஜா இதனைத் தெரிவித்தார்.

இந்த வழக்கில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்ட 7 பேரையும் பிணையில் விடுவித்த நீதிமன்றம் எதிர்வரும் மே மாதம் 8ஆம் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்தது.

முன்னதாக, 7 பேர் மீதும் பொலிஸார் தாக்கல் செய்த 'பி' அறிக்கையில், உள்ளூராட்சி சட்டவிதிகள் 81, 81 பி இன் கீழ் இவ்வாறான ஊர்வலங்கள், கூட்டங்களை நடத்தமுடியாது. இந்தப் போராட்டத்தால் பொதுமக்களுக்கு அசௌகரியம் ஏற்பட்டது, பொதுப்போக்குவரத்து பாதிக்கப்பட்டது. அரசமைப்பின் 15 ஆவது பிரிவின் கீழ் ஆர்ப்பாட்டங்களை நடத்தமுடியாது என ஒலிபெருக்கியில் அறிவித்தோம். இந்தப் போராட்டத்தால் பொதுமக்களுக்கு இழப்பு ஏற்பட்டு, அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளன எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

பிரதிவாதிகள் தரப்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராஜா பூர்வாங்க ஆட்சேபணையை முன்வைத்தார். பொலிஸார் குறிப்பிட்டதைப் போல எந்த [illegible] இல்லை. உள்ளூராட்சிச் சட்டவிதிகள் 81, 81 பி இன் கீழ் வரும் சம்பவங்கள் தேர்தலுடன் தொடர்புடையவை. ஆனால், இது தேர்தலுடன் தொடர்புடைய ஒரு பேரணியல்ல. ஆகவே, குற்றம்சாட்டப்பட்ட அனைவரையும் விடுதலை செய்யவேண்டும்.

போராட்டத்தால் பொதுமக்களின் உரிமைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். ஆனால், அவ்வாறு பாதிக்கப்பட்டதாக யாராவது முறைப்பாடு செய்துள்ளார்களா? இல்லை. யாழ்ப்பாணத்திலிருந்து பேரணி புறப்பட்டு மட்டக்களப்பு சென்றது. மட்டக்களப்பிலும் பல கூட்டங்கள் நடத்தப்பட்டன. ஆனால், எந்த பொலிஸ் நிலையத்தின் சார்பிலும் வழக்குத் தாக்கல் செய்யவில்லை. யாழ்ப்பாணப் பொலிஸார் மட்டுமே வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். சட்டம் தெரியாமல், சட்டத்தைப் புரிந்துகொள்ளாமல் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கை நிராகரிக்கவேண்டும்.

இந்த வழக்கில் வேலன் சுவாமியை 7ஆவது பிரதிவாதியாகக் குறிப்பிட்டுள்ளனர். தெற்கில் எத்தனையோ போராட்டங்கள் நடக்கின்றன. அதில் பிக்குகள் கலந்துகொள்கிறார்கள். பொலிஸார் அதைக் கண்டுகொள்வதில்லை. அண்மையில் பிக்குகளால் '13'ஆவது திருத்தம் தீயிட்டு எரிக்கப்பட்டது. தமிழ் மக்கள் சார்பில் வேலன் சுவாமியென்ற ஒரேயொரு இந்து மதகுருதான் மக்களுக்காக குரல் கொடுக்கிறார். அவரை எல்லா வழக்குகளிலும் பிரதிவாதியாக குறிப்பிட்டுள்ளனர். அவர் இந்தப் போராட்டங்களை ஒருங்கிணைக்கவில்லை. அதில் கலந்துகொண்டது மட்டுமே அவர் செய்த செயல். இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்ட ஆயிரக்கணக்கானவர்கள் உள்ளனர். இதில் 7 பேரை மாத்திரமே பொலிஸார் தெரிவுசெய்துள்ளனர். பொதுமக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக பொலிஸார் கவலைப்படும் முதல் சந்தர்ப்பம் இது. ஆனால், பொலிஸாருக்கு எதிராகத்தான் அடிப்படை மனித உரிமை ஆணைக்குழு உருவானது. பொலிஸார், அரசாங்கத்துக்கு எதிராகத்தான் மனித உரிமை மீறல் வழக்கு பதிவு செய்யலாம் - என்றார்.

'போராட்டத்தால் பாதிக்கப்பட்டதாக பொதுமக்கள் யாராவது முறைப்பாடு செய்தனரா?' என நீதிவான் ஆனந்தராஜா பொலிஸாரிடம் கேட்டார். பொலிஸார் இல்லையென்றனர். இதையடுத்து, பிரதிவாதிகளுக்கு பிணை வழங்குவதாக நீதிவான் அறிவித்தார்.

பிரதிவாதிகள் தரப்பில் முன்னிலையான சட்டத்தரணிகளான கே.வி.தவராஜா, என்.சிறீகாந்தா ஆகியோர், இந்த வழக்கை தொடர்வதா? இல்லையா? என்பது குறித்து சட்டமா அதிபரிடம் ஆலோசனை பெறும்படி பொலிஸாரை அறிவுறுத்துமாறு கேட்டுக்கொண்டனர். இதையடுத்து, வழக்கைத் தொடர்வதா? இல்லையா? என்பது பற்றி சட்டமா அதிபரிடம் ஆலோசனை பெறுமாறு நீதிவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

அத்துடன், பிரதிவாதிகளை பொலிஸாரிடம் வாக்குமூலமளிக்கவும் குறிப்பிடப்பட்டது. எனினும், பிரதிவாதிகள் தரப்பு சட்டத்தரணிகள் அதை ஆட்சேபித்து, நாடாளுமன்ற உறுப்பினர்கள் பொலிஸ் நிலையம் சென்று வாக்குமூலமளிக்கமுடியாது என்றும், தேவையான விவரத்தை பொலிஸார் நீதிமன்றத்திலேயே பெற்றுக்கொள்ளுமாறும் குறிப்பிட்டனர். நீதிவான் இதற்கான கட்டளையை வழங்கினார். இதையடுத்து, நீதிமன்றத்திலேயே பொலிஸார் வாக்குமூலங்களைப் பதிவு செய்தனர்.

இந்த வழக்கின் முதலாவது பிரதிவாதி நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், இரண்டாவது பிரதிவாதி நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், நான்காவது பிரதிவாதி நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈ.சரவணபவன் மற்றும் வேலன் சுவாமிகள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராஜா முன்னிலையாகினார்.

மூன்றாவது பிரதிவாதி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், ஐந்தாவது பிரதிவாதி எம்.கே.சிவாஜிலிங்கம் சார்பில் மூத்த சட்டத்தரணி என.சிறீகாந்தா முன்னிலையாகினார். செல்வம் அடைக்கலநாதன் நீதிமன்றத்தில் முன்னிலையாகவில்லை. அதற்கான மருத்துவ அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. ஆறாவது பிரதிவாதியான வி.மணிவண்ணன் மன்றில் நேற்று முன்னிலையாகவில்லை. அவருக்கு பிறிதொரு திகதி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-5)

## தேர்தலை...

அறிவித்துள்ளது. தேர்தலை நடத்துவதற்காக தம்மால் கோரப்பட்ட நிதி, திறைசேரி செயலாளரால் விடுவிக்கப்படவில்லை என தேர்தல் ஆணைக்குழு முன்னதாக அறிவித்திருந்தது. அதேவேளை, வாக்குச்சீட்டு அச்சிடலுக்கு போதியளவு பணம் கிடைக்கப்பெறாத நிலையில் அச்சிடும் பணிகள் அரசாங்க அச்சகத்தால் இடைநிறுத்தப்பட்டிருந்தன. இதனால், அரசாங்க அச்சகம் உரிய வகையில் வாக்குசீட்டுகளை வழங்காமையால், தபால்மூல வாக்கெடுப்பை காலவரையறையின்றி பிற்போடத் தேர்தல் ஆணைக்குழு தீர்மானித்தது.

இதனிடையே, எதிர்வரும் மார்ச் 9 ஆம் திகதி உள்ளூராட்சித் தேர்தலை நடத்த தீர்மானிக்கப்பட்டிருந்தபோதிலும் திட்டமிட்டவகையில் தேர்தலை நடத்துவது சாத்தியமில்லையென உயர் நீதிமன்றத்துக்குத் தேர்தல் ஆணைக்குழு நேற்று அறிவித்துள்ளது. ஆயினும், உள்ளூராட்சி மன்றத் தேர்தலை, உரிய தினத்தில் நடத்தமுடியாமற்போனால், ஏற்றுக்கொள்ளப்பட்ட வேட்பு மனுக்கள், வாக்களிப்பு இடம்பெறும் வரையில், செல்லுபடியாகும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (அ-ஒ-இ)

## கட்டப்பிராயில்...

பட்டுள்ளது. ஆசிரியர் இரண்டு நாள்களாக வீட்டில் இல்லாத தருணத்தை அவதானித்து கதவை உடைத்து உட்புகுந்த திருடர்கள் 16 பவுண் நகைகளை களவாடிச் சென்றுள்ளனர். (அ-ஒ-26)

## ஒரேநாளில்...

நேரத்தில் ஓமந்தையில் கார் ஒன்றையும் இடித்துத் தள்ளி விபத்துக்குள்ளாகியுள்ளது. தெய்வாதீனமாக இந்த இரு விபத்துகளிலும் உயிர்ச் சேதம் எதுவும் ஏற்படவில்லை. பேருந்தில் பயணித்த சிலர் காயங்களுக்கு உள்ளான நிலையில் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்றுத் திங்கட்கிழமை காலை இடம்பெற்ற முதலாவது விபத்தில், யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்துந்தொன்று, அறிவியல் நகர் பல்கலைக்கழகப் பணியாளர்களை இறக்கிவிட்டுத் திரும்பியவேளை ரயிலுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. விபத்துக்குள்ளான பேருந்து, அதன் பின்னால் தரித்து நின்ற யாழ்.பல்கலைக்கழக பொறியியல் பீடாதிபதியின் கப் ரக வாகனத்தை மோதித் தள்ளியதால், கப் ரக வாகனம் கடுமையான சேதத்துக்குள்ளாகியது என ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதன்பின்னர் சிறிதுநேரத்தில் வவுனியா - ஓமந்தையில் கார் ஒன்றையும் யாழ்ராணி மோதித்தள்ளியது. இதன் போதும் உயிரிழப்புகள் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பாடுகளின் நாடகத்திற்கான பிரதி வழங்கும் நிகழ்வு நாளை

யாழ்ப்பாணம், பெப். 21

திருமறைக் கலாமன்றத்தால் ஆண்டு தோறும் கிறிஸ்தவர்களின் தவக்காலத்தில் மேடையேற்றப்படும் இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பை சித்தரிக்கும் திருப்பாடுகளின் நாடகத்துக்கான பிரதி வழங்கும் வைபவம் தவக்காலத்தின் ஆரம்ப நாளாகிய நாளை புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு யாழ்ப்பாணம் மார்ட்டீன் வீதி அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் 'கலைஞான சுரபி' தியான இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் திருமறைக் கலாமன்றத்தின் ஆரம்பகால இயக்குநர்களில் ஒருவரும், ஊறணி பங்குத்தந்தையுமான அருட்பணி தி.இ.தேவராஜன் அடிகள் கலந்துகொண்டு ஆசியுரை வழங்குவதுடன், ஆற்றுகையில் பங்கேற்கவுள்ள கலைஞர்களுக்கான பிரதிகளையும் வழங்கி வைப்பார்.

பிரதி வழங்கும் வைபவத்தில் வழமையாக திருப்பாடுகளின் நாடகத்தில் பங்கேற்கின்ற அனைத்துக் கலைஞர்களையும், புதிதாக இணைந்துகொள்ள விரும்புபவர்களையும் கலந்துகொள்ளுமாறு திருமறைக் கலாமன்றம் அழைப்பு விடுத்துள்ளது.

இவ்வாண்டு திருப்பாடுகளின் நாடகம் மார்ச் மாதம் 30 ஆம் 31 ஆம் திகதிகளிலும் ஏப்ரல் மாதம் 1 ஆம் 2 ஆம் திகதிகளிலுமாக நான்கு நாள்களுக்கு 'குருதி கழுவிய குவலயம்' என்னும் பெயரில் மாலை 6.45 மணிக்கு யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் மேடையேற்றப்படவுள்ளது. (ஒ-இ)

# சிசுவைக் கொன்ற தாய்

கொழும்பு, பெப். 21 பிறந்து ஏழு நாள்களேயான சிசுவை கொலைசெய்த குற்றச்சாட்டில் 28 வயதான தாயொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் பேருவளை பயாகல பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கடந்த 9ஆம் திகதி பிறந்த இரட்டைக் குழந்தைகளில் ஒன்றே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த புதன்கிழமை குழந்தை படுக்கையிலிருந்து விழுந்துள்ளது எனத் தெரிவித்து பெற்றோரால் களுத்துறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் குழந்தை உயிரிழந்துள்ளது என மருத்துவமனையில் தெரிவிக்கப்பட்டது.

அதன்பின்னர் மேற்கொண்ட பிரேத பரிசோதனையில் குழந்தை தாக்கப்பட்டதில் உயிரிழப்பு நேர்ந்துள்ளது என அறிக்கையிடப்பட்டுள்ளது.

சந்தேகநபரான தாய், குழந்தையை தரையில் அடித்துக் கொன்றுள்ளார் எனப் பொலிசார் மேற்கொண்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. சந்தேகநபரை களுத்துறை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-இ)


**வேலையாட்கள் தேவை**

கிறைண்டிங் மில் வேலை ஆட்கள் தேவை.

**076 372 5367**

**பணிப்பெண் தேவை**

வீட்டில் தங்கி நின்று வேலை செய்வதற்குப் பணிப்பெண் (சமையல் வேலை உட்பட) தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

**077 045 6493**

**பெண் வேலையாள் தேவை**

**Coffee Shop** இற்குப் பெண் வேலையாள் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

**Creamy Creations & Creamy Cafe**

**751, Hospital Road, Jaffna.**

**077 133 4066/ 076 658 7149**

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம்

**அந்தண உதவிப் பூசகர் தேவை**

தகுதியானவர்கள் கீழுள்ள தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொண்டு தங்களது விண்ணப்பத்தினை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். வேதனம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும். நியமனம் செய்யப்படும் உதவிப் பூசகர், ஆலயத்தினால் வழங்கப்படும் தங்குமிடத்தில் (வீடு) தங்கியிருந்து கடமையாற்ற வேண்டும். (CS 23573)(3/6)

செயலாளர்,
ஆலய பரிபாலன சபை
தொ.பே.இல : 077 222 2024, 077 446 3822


# இலங்கை இராணுவம் மீது நடவடிக்கை எடுக்குக!

## ஜெய்சங்கரிடம் ஸ்டாலின் கோரிக்கை

சென்னை, பெப். 21

கடந்த வாரம் தமிழகத்தைச் சேர்ந்த 6 மீனவர்கள் மீது நெடுந்தீவுக் கடற்பரப்பில் வைத்து தாக்குதல் நடத்திய இலங்கை இராணுவம் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் இந்திய மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கு தமிழக முதல்வர் கடிதம் ஒன்றையும் அனுப்பியுள்ளார். (அ-ஒ,இ)

# பாடசாலை அனுமதிகள் மார்ச் 27 வரை நிறுத்தம்

கொழும்பு, பெப். 21

பாடசாலைகளில் தரம் 2 முதல் தரம் 10 வரையான அனுமதிகள் எதிர்வரும் மார்ச் மாதம் 27 ஆம் திகதி வரை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன என்று கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

இந்த வகுப்புகளுக்கான அனுமதிகளில் முறைகேடுகள் இடம்பெற்றதைத் தொடர்ந்தே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளிலிருந்து வருவோர், இடமாற்றம் பெற்றுச்செல்லும் உத்தியோகத்தர்கள் போன்றவர்களின் பிள்ளைகளுக்கு இதன்போது முன்னுரிமை அளிக்கப்படும்.

புதிய அனுமதியின்போது மேலதிக கட்டணங்கள் எதுவும் செலுத்தத் தேவையில்லை என்றும் கல்வியமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ஒ-14,6)


**காணி விற்பனைக்கு**

பிரதான வீதி, தெல்லிப்பளையில் 8 பரப்புக் காணி முழுமையாக அல்லது பகுதியாக பிரித்து வழங்கப்படும். இரண்டு பக்கம் பாதை உள்ளது. (கடை, மண்டபம், விருந்தினர் விடுதி அமைப்பதற்கு சிறந்த இடம்)

**T.P: 075 077 4745**

**மணப்பெண் தேவை**

01. புங்குடுதீவு, இந்து கௌரவகுலம் (V), 1979, விசாகம், CIMA, Business Administration, UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. பதிவெண் - 15039
02. கோப்பாய், இந்து கௌரவகுலம் (V), 1984, சதயம், MBBS, Doctor, UK citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. பதிவெண் - 32160
03. திருநெல்வேலி, இந்து கௌரவகுலம் (V), 1990, விசாகம், MBBS, Doctor, UK citizen, மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. பதிவெண் - 32016
04. திருநெல்வேலி, இந்து கௌரவகுலம் (V), 1983, ரோகிணி, B.Sc (Hons) Computer Science, UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. பதிவெண் - 31305
05. உரும்பிராய், இந்து கௌரவகுலம் (V), 1974, திருவோணம், B.Sc Finance Advisor, கனடா, Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. பதிவெண் - 23110
06. மல்லாகம் - உடுவில், இந்து கௌரவகுலம் (V), 1984, சுவாதி, B.Sc Masters in Statistics, USA Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. பதிவெண் - 28963
07. காரைநகர் இந்து கௌரவகுலம் (V), 1986, உத்திராடம், Airspace Engineer, USA, Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. பதிவெண் - 24891
08. மீசாலை, இந்து கௌரவகுலம் (V), 1983, சதயம், M.Sc Engineer, UK Citezen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. பதிவெண் - 39216
09. யாழ்ப்பாணம், இந்து கௌரவகுலம் (V), 1984, சுவாதி, B.Sc,Business Managment,UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. பதிவெண் - 31799
10. காரைநகர், இந்து கௌரவகுலம் (V), 1975, விசாகம், M.Sc, Business, UK, Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. பதிவெண் - 25104

தொடர்புகளுக்கு- S.Sharma J.P Astrologer
Whatsapp - 077 803 8193
Phone - 077 539 3728

**பரமானந்தா சிறுவர் முதியோர் இல்லப் பணியாளர் வெற்றிடங்கள்**

**1. சிறுவர் அபிவிருத்தி நிலைய முகாமையாளர் பெண்**
- கல்வித்தகைமை - க.பொ.த. உயர்தரம் சித்தி மற்றும் பட்டதாரிகள்
- பால் - பெண்
- வயது 25 - 55 வயதுக்குட்பட்டவர்கள்
- இல்லத்தில் தங்கியிருந்து பணியாற்றுதல் வேண்டும்.

**2. உளவள ஆலோசகர்**
- உளவள கற்கை நெறியை பூர்த்தி செய்தவர்கள்
- பால் - பெண்

**3. பெண் சிறுமிகள் மேற்பார்வையாளர் :-**
- வயது 25 - 55 வயதுக்குட்பட்டவர்கள்
- கல்வித்தகைமை- க.பொ.த.(சா/த) இல் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் கணிதம் மற்றும் தமிழ் மொழி சித்தியுடன் 06 பாடங்களிற்கு குறையாமல் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
- இல்லத்தில் தங்கியிருந்து சேவையாற்றுதல் கட்டாயமானது

**4. பெண் காவலாளி**
- வயது 35 வயது தொடக்கம் 60 வயது வரை
- கல்வித்தகைமை க. பொ.த சாதாரணம்

அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

**விண்ணப்ப முடிவு திகதி 10.03.2023**

தலைவர்
மா. சிவசண்முகம்
ஸ்ரீபரமானந்தா சிறுவர் முதியோர் இல்லம்,
வதிரி, கரவெட்டி.
தொலைபேசி இல- 021 226 3136,
021 226 5069,
077 514 7045

(CR 39290)(3/6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.02.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.